பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 25,ஞாயிற்றுக்கிழமை 10.09.2017 கதிர் 308

## பலாலி படைத்தளச் சிப்பாய் துப்பாக்கியுடன் தலைமறைவு

### இராணுவம் தீவிர தேடுதல்

காங்கேசன்துறை,செப்.10

பலாலி படைத்தளத்தில் பணியாற்றிய படைச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியுடன் காணாமற் போய்விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை ஊறணிப் பகுதியில் உள்ள 4 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த இவர் நேற்று முன்தினம் இரவு முதல் காணாமற் போய்விட்டார் என படைத் தரப்பு தகவல் தெரிவித்துள்ளது.

பலாலி படைத் தலைமையகத்தில் உள்ள காவலரணுக்கு பக்கம் 22

## பேரவைப் பிரகடனத்துக்கு முன்னரே கூட்டமைப்பின் அறிக்கை ஒப்படைப்பு

கொழும்பு,செப்.10

அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையோடு சேர்த்து வெளியிடுவதற்காக தாம் சமர்ப்பித்த அறிக்கை – ஆவணம் – கடந்த மாத இறுதியிலேயே அதற்குரிய அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்று கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

'இணைந்ததாயகத்தில், சமஷ்டி அடிப்படையில், அதிகூடிய அதிகாரப் பகிர்வை' கூட்டமைப்பின் இந்த ஆவணம் வலியுறுத்துவதாகக் கூறப்படுகிறது.

எனினும் இந்த ஆவணத்தில் இடம்பெறும் விடயங்கள் பற்றிய தகவல்களை இரண்டொரு தினங்களுக்கு முன்னரே கூட்டமைப்பு பகிரங்கப் படுத்தியது. கடந்த 5ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவையால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடல் கூட்டத்தின் முடிவில் விடுக்கப்பட்ட பொதுப் பிரகடனத்தை அடுத்தே கூட்டமைப்புத் தலைமை வேறு பக்கம் 22


# வடக்கு குறித்து தெற்கு மக்கள் தவறான புரிதல்

## கண்டியில் மல்வத்துத் தேரரை சந்தித்து முதல்வர் விக்னேஸ்வரன் விளக்கினார்

கண்டி,செப்ரெம்பர் 10

வடக்கு மக்கள் குறித்து தென்னிலங்கை மக்களுக்கு தவறான புரிதல் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதுகுறித்து மல்வத்தை மகா நாயக்கர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்த சமயம் அவருக்கு அதனை விளக்கமாக எடுத்துரைத்தேன்.

- இவ்வாறு நேற்று கண்டியில் மகா நாயக்கரைச் சந்தித்த பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார். பக்கம் 22



## கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் பிரதேச மக்கள் நேற்று சிரமதானம்

### இம்முறை மாவீரர் நாளில் நினைவேந்தல்



அம்பாறை, செப்.10

அம்பாறை – திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் நேற்று சிரமதானம் மூலமாகத் துப்புரவு செய்யப்பட்டது. முன்னாள் போராளிகளும் மாவீரர்களின் உறவினர்கள் மற்றும் பிரதேச மக்களும் இணைந்து இந்தச் சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

மட்டு., அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் போராளிகளான கே.பிரபாகரன் மற்றும் எஸ்.சுதாகர் ஆகியோரின் பக்கம் 22

## வீதி விதிமீறலுக்கு ரூ.25,000 அபராதம் அடுத்த வாரத்தில் வர்த்தமானி அறிவிப்பு

கொழும்பு,செப்.10

சாரதிகளுக்கு 25 ஆயிரம் ரூபா என்ற ஆகக் குறைந்த அபராதத் தொகையை விதிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரமளவில் வெளியிடப்படவுள்ளது.

இந்தத் தகவலை வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

இந்த அபராதத் தொகையை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

## முதலமைச்சருடன் அமைச்சர்களும் மகாநாயக்கரை நேற்று சந்தித்தனர்

### யாழ். வருகை தருமாறும் அழைப்பு



கொழும்பு, செப்.10

முதலமைச்சருடன் வடக்கு மாகாண அமைச்சர்களும் மல்வத்து பீட மகாநாயக்கருடனான சந்திப்பில் பங்குபற்றினர்.

கண்டியில் உள்ள மல்வத்துபீட விகாரைக்குச் சென்ற முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் அங்கு தேரரைச் சந்தித்து ஆசி பெற்றனர்.

பின்னர் அவருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

மரியாதைக்குரிய சந்திப்பாக அமைந்த இச் சந்திப்பின்போது வடக்கின் நிலைப்பாடுகளை முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அமைச்சர்களும் மல்வத்து பீட மகாநாயக்கருக்கு எடுத்துக் கூறினர்.

மேலும், வடக்கில் 89 ஆயிரம் பெண்கள் விதவைகளாகவுள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், அதேபோன்று அநாதைக் குழந்தைகளும் அதிகமானோர் உள்ளனர் எனவும் தேரருக்கு எடுத்துக் கூறினார். பக்கம் 22

## கிளிநோச்சி பாரதிபுரத்தில் இளைஞருக்கு வாள்வெட்டு

### பெறுமதிமிக்க மோ.சைக்கிளும் தீக்கிரை



கிளிநொச்சி,செப்.10

கிளிநொச்சி பாரதிபுரத்தில் இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலின்போது ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானார். நேற்று மாலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பக்கம் 22

# நாட்டைப் பிரிப்பதற்கு 'நல்லாட்சி' சதி; எதிர்க்க தேரர்கள் முன்வரவேண்டும்!



## முத்தட்டுவே ஆனந்த தேரர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

நல்லாட்சி அரசு நாட்டில் முன்னெடுக்கும் முறையற்ற ஆட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தது போதும். எனவே, அரசிற்கு எதிராக களத்தில் இறங்க வேண்டிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது. ஆகவே, 1955 ஆம் ஆண்டு இடம்பெற்றதைப்போன்று யுக மாற்றத்திற்கு நாம் தயாராகி விட்டோம். அந்தப் பயணத்தில் சகல பௌத்த தேரர்களும் இணைந்து கொள்ள வேண்டும். அந்தப் பயணத்தில் குறுக்கிடும் சகல சவால்களையும் முகம்கொடுப்பதற்கு நாம் தயாராகிவிட்டோம் என முத்தட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தாய்நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பு ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நாரஹேன்பிட்டியிலுள்ள அபயராம விகாரையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசுதேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. மேலும் அமரர் மாதுலுவாவே சோபித தேரரின் பூதவுடலுக்கு முன்னால் நின்றுகொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய உறுதி மொழியும் நிறைவேற்றப்படவில்லை.

அத்துடன் தற்போது நாட்டில் எப்போதுமில்லாதவாறு பௌத்த மதத்திற்கு எதிரான சதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அச்சதி முயற்சிகள் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன. நல்லாட்சி அரசு ஆரம்பத்தில் 48 தேரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தது. அவ்வாறான செயற்பாடு இதற்கு முன்னர் இடம்பெறவில்லை.

மேலும், தற்போது அமைச்சர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகாபோன்றோர் தேரர்களுக்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை நாட்டில் மேற்கொள்ள வேண்டிய பல விடயங்கள் இருக்கும்போது அரசாங்கம் அதனைக் கைவிட்டு விட்டு நாட்டு வளங்களை விற்பனை செய்வதுடன் அவசியமற்ற அரசமைப்பைக் கொண்டு வந்து நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கு முயற்சிக்கிறது. ஆகவே இது தொடர்பில் சகலரும் விழித்து உரிய நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

மேலும் இலங்கையின் தனித்துவத்திற்கு பாதகம் ஏற்படுத்துவதற்கு முனைந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தேரர்கள் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்து நடவடிக்கை எடுத்துள்ளனர். அதனை வரலாறு நெடுகிலும் அவதானிக்க முடிகிறது. எனவே நல்லாட்சி அரசின் செயற்பாடுகளைப் பார்த்துக்கொண்டிருந்தது போதும். பணியில் இறங்க வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தேரர்களாகிய நாம் தயாராகி விட்டோம். இப்பணியில் சகல தேரர்களும் இணைந்துகொள்ளவேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டு தாய் நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பு பாத யாத்திரை ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தெவிநுவர ரஜமகா விகாரையில் பௌத்த வழிபாடுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். அத்துடன் எதிர்வரும் 28 ஆம் திகதி அங்கிருந்து பாத யாத்திரையை ஆரம்பிக்கவுள்ளோம். பாதயாத்திரையின்போது சில இடங்களில் கூட்டங்களையும் நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

எதிர்வரும் 30 ஆம் திகதி பேலியகொடையிலிருந்து தொடரும் பாதயாத்திரை களனி விகாரை வரை சென்று அங்கு சமய அனுஷ்டானங்களை செய்வதற்கும் ஏற்பாடு செய்துள்ளோம்.

அது தவிர எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதே ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் மாநாடொன்றை நடத்தி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நினைவு நாளும் நினைவுப் பேருரையும்

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும், நினைவுப் பேருரையும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகம் - செல்லா மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், சிறப்பு அதிதிகளாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பல் வைத்திய நிபுணர் அ.சுரேஸ், சாக்கிலிஸ் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ப.பிரகலாத், கொக்குவில் பூட்சிற்றி உரிமையாளர் சி.யோகபாலன், வாழ்வகம் பழைய மாணவியும், ஆசிரியையுமான செ.பெனிடிக்றா, வலிகாமம் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் வி.விஸ்ணுகரன், சுன்னாகம் பொலிஸ் இன்பெக்டர்மு.செல்வகுமார் ஆகியோரும், கௌரவ அதிதியாக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையையாழ்.போதனாவைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தியும், பிரதம அதிதி உரையை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதனும் நிகழ்த்துவர். 'வாழ்வகம்' 30 ஆவது ஆண்டில் காலடி வைத்துள்ள நிலையில் அனைவரையும் நிகழ்வுக்கு அழைக்கின்றோம் என்று வாழ்வக சமூகம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-ச)

## லலித் வீரதுங்க, அனுஷ இருவரும் பல்பிட்ட குற்றவாளிகள் அல்லர் என்கிறார் எஸ்.பி!



கொழும்பு, செப். 10

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பல்பிட்ட ஆகிய இருவரும் குற்றவாளிகள் அல்லர்என அரசின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே சமூக வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அவர்கள் இருவரும் நிதி மோசடியில் ஈடுபடவில்லை என்பதை நீதிமன்றமே ஏற்றுக் கொண்டுள்ளது.

சீத்தை துணி விநியோக விடயத்தில் லலித் வீரதுங்கவும், அனுஷ பல்பிட்டவும் ஒரு சதத்தையேனும் கொள்ளையடிக்கவில்லை எனவும், நிதி மோசடியில் ஈடுபடவில்லை எனவும் நீதிமன்றமே அறிவித்துள்ளது.

எனினும், விலைக்கோரல் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்ட சமயத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளிலேயே குழப்பங்கள் நிகழ்ந்துள்ளன.

லலித்வீரதுங்கவும், அனுஷ பல்பிட்டவும் ஊழல் வாதிகள் அல்லர். அவர்கள் சாதாரண அதிகாரிகளே, அந்த சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானத்திற்கு அமைய செயற்பட்டது மாத்திரமே அவர்களது பணி.

ஆகவே இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி பொறுப்பேற்பாராயின் அவர்களுக்கு எதுவும் நடைபெறப்போவது இல்லை.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியாது. அரசியல்வாதிகள் பொறுப்பேற்க வேண்டும்.

இல்லையேல் பிரச்சினைகள் உக்கிரமடையும். அரசியல் வாதிகள் பொறுப்பேற்பதில் விட்ட பிழையே அவர்களை சிறைக்குள் தள்ளியிருக்கின்றது. அவர்கள் இருவரும் திருடர்களோ, ஊழல்வாதிகளோ அல்லர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நீதிமன்றத்தை அவமதிக்கும் நபர்கள் தேடப்படுகின்றனர்

### பிரதமர் ரணில்!

நீதிமன்றத் தீர்ப்புகள் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு மக்கள் மத்தியில் நீதிமன்றம் தொடர்பாக தவறான மனநிலையை ஏற்படுத்த முயற்சிக்கும் நபர்கள் குறித்து தேடி அறிந்து, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த அரசைப் போல் தற்போதைய அரசு நீதிமன்ற விவகாரங்களில் தலையிடாது அதன் சுதந்திரத்தைப் பாதுகாத்து மக்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடிய பின்னணியை உருவாக்கியுள்ளது.

இவ்வாறானநிலைமையில், சில தரப்பினர் நீதிமன்றத்திற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்கள் வழியாக கருத்துக்களை வெளியிட்டு வருவது நீதிமன்ற சுதந்திரத்திற்கு பெரும் தடையாக அமைந்துள்ளது என பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்புகள் தொடர்பில் திருப்தியில்லை என்றால், அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டை செய்யும் உரிமையுள்ளது. இந்த நிலையில், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க எவருக்கும் இடமளிக்க முடியாது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலய இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு!



பருத்தித்துறை, செப். 10

வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் தேவஸ்தான இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வு திருப்பணி சபைத் தலைவரும், வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் தேவஸ்தான குருக்களும், ஆதீனகர்த்தாவுமாகிய சிவஸ்ரீ வே.பாலச்சந்திர குருக்கள் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் அடியார்கள் சூழ மிகவும் கோலாகலமாக அடிக்கல் நடப்பட்டதைத் தொடர்ந்து, 108 சங்குஸ்தாபனமும் நடைபெற்றது.

# சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

## கொல்லப்பட்டோரின் உறவுகள் கண்ணீருடன் தீபம் ஏற்றி அஞ்சலி





மட்டக்களப்பை உலுக்கிய சத்துருக்கொண்டான் படுகொலை நினைவு தினம் நேற்று உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது. உலகத் தமிழ் மாணவர் ஒன்றிய மும்பிரதேசமக்களும் இணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

சத்துருக்கொண்டான் படு கொலை நினைவுத்தூபிக்கு முன் பாக நினைவேந்தல் இடம்பெற் றது. ஆலய வழிபாட்டுடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது. படு கொலை செய்யப்பட்ட உறவு களுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதேச மக்கள், பல்கலைக் கழக மாணவர்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலர் இந்த நினைவேந்தல் நிகழ் வில் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சத்துருக்கொண்டான், பனிச்சை யடி, பிள்ளையாரடி, கொக்குவில் ஆகிய கிராமங்களில், தமது வீடு களில்தங்கியிருந்த பொதுமக்கள் கடந்த 1990 ஆம் ஆண்டு செம் ரெம்பர்மாதம்9ஆம்திகதிமாலை 5.30 மணியளவில் சத்துருக் கொண்டான் இராணுவ முகாமுக் குள் அழைத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

விசேட தேவையுடைய 5 பிள்ளைகள், 10 வயதிற்கு உட்பட்ட 42 பிள்ளைகள், 85 பெண்கள், 28 முதியவர்கள் என 186 அப் பாவித் தமிழ்ப் பொதுமக்கள் படையினரால் ஈவிரக்கமின்றி வெட்டிக் கொல்லப்பட்டனர்.

சம்பவ தினம் மாலை 5.30 மணியளவில் மேற்படி கிராமங் களுக்குச் சென்ற படையினரும் படைப் புலனாய்வாளர்களும் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமில்ஒருகூட்டம்இருக்கின்றது எனக்கூறிபொதுமக்களைஅழைத் துச் சென்றனர். நடக்கு முடியாத வர்கள் இராணுவ லொறிகளில் ஏற்றிச்செல்லப்பட்டனர்.

இவ்வாறு கொண்டுசெல்லப் பட்டவர்கள் ஆண், பெண், சிறு வர்கள், முதியவர்கள் என வேறு படுத்தப்பட்டு இரவு 7.00 மணி யளவில் ஈவிரக்கமின்றி வெட்டிக் கொல்லப்பட்டு அங்கு வெட்டப் பட்ட பெரிய குழியில் போடப்பட்டு ரயர் போட்டு எரிக்கப்பட்டனர்.

இவ்வாறு வெட்டித்தூக்கி வீசப் பட்ட நபர் ஒருவர் தெய்வாதீன மாக குழியில் விழாமல் வேலி ஓர மாக வீசப்பட்டார். அவர் வேலிக் குக்கீழாக தவழ்ந்து சென்று அரு கில் பற்றைக் காட்டுக்குள் பதுங் கிய பின்னர் மறுநாள் ஒருவாறு தப்பிச்சென்று கிறிஸ்தவ மதகுரு ஒருவரின் உதவியுடன் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவர் தப்பிச்சென்றதை அறிந்த படையினரும் புலனாய் வாளர்களும் அவரை வைத்தி யசாலையில் வைத்துக் கடத்திச் செல்ல முற்பட்டபோதிலும் அது கைகூடவில்லை.

அவரது தகவலின் நிமித்தம் அந்த இராணுவ முகாமுக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் முகாம் பொறுப்பதிகாரியிடம் விசாரணைகள் மேற்கொண்ட போதிலும் அவர்கள் அச்சம்ப வத்தை அறவே மறுத்திருந்தனர். எனினும் பின்னர் அது உறுதிப் படுத்தப்பட்டது.

அது தொடர்பாக இன்றுவரை உரிய விசாரணைகள் நடைபெற வில்லை. நல்லாட்சி அரசாங்க மாவது இந்தப் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்துமா என நேற்றைய நினைவு தினத் தில் கலந்துகொண்ட மக்கள் கேள்வி எழுப்பினர். (ம)

## 'ஆள்கடத்தலைத் தடுக்க ஒப்பந்தம் கைச்சாத்து'

இலங்கை – ஆஸ்திரேலியா இடையே நடக்கும் ஆள்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க இரு நாடுகளிடையே கடந்த கடந்த 6 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந் தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆட்கடத்தல் செயல்களில் ஈடு படுபவர்களை இலங்கைக்கே திருப்பி அனுப்ப இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது எனக் கூறப் படுகின்றது.

ஆள்கடத்தல் நடவடிக்கை களை கண்காணிக்கும் வழி முறைகள், இடைமறித்தல், ஆள் கடத்தல்காரர்களிடம் விசாரணை உள்ளிட்ட முறைகள் இருநாடுகள் பகிர்ந்து கொள்ளும்.

ஆஸ்திரேலியாவில் நடை பெற்ற நிகழ்வில், இந்த ஒப்பந் தத்தினை உறுதிச் செய்து ஆஸ் திரேலிய குடிவரவு மற்றும் எல் லைப்பாதுகாப்புசெயலாளர்மைக் கேல் பெஸ்சலோவும் இலங்கை பாதுகாப்புத் துறை செயலாளர் கபிலா வைத்தியரத்னவும் கையெ ழுத்திட்டுள்ளனர்.

கடந்த 2013 முதல் கடுமை யான எல்லைப் பாதுகாப்பு கொள்கை நடைமுறைப்படுத்தி வரும் ஆஸ்திரேலிய அரசு, படகு வழியே ஆஸ்திரேலியா வர முயற் சிப்பவர்களை திருப்பி அனுப்பி வருகின்றது. அந்நடவடிக்கையின் தொடர்ச்சியாக இப்புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தாகியுள் ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பயணிகளுடன் சவாரி செய்த பேருந்துகள் கல்லூண்டாய் வீதியில் விபத்துக்குள்ளாகின

## தனியார் பேருந்து இ.போ.ச பேருந்தை மோதியது

வட்டுக்கோட்டை, செப்.10

போட்டியிட்டு கடுகதி வேகத் தில் பயணித்த இ.போ.ச. பேருந் தும் தனியார் பேருந்து ஒன்றும் கல்லுண்டாய் வீதியில் நேற்று மாலை விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் ஒருவர் சிறு காய மடைந்தார். மேலும் சிலர் பாதிப் புக்கு உள்ளாகினர்.

வட்டுக்கோட்டை – கல்லுண் டாய்வீதியில், கல்லுண்டாய்பாலத் திற்கு சமீபமாக நேற்று மாலை 6.30 மணியளவில் இந்தவிபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் செல்லும் இ.போ.ச பேருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி ஊடாகச் சித் தங்கேணி செல்லும் தனியார் பேருந்தும் யாழ்.பேருந்து நிலை யத்தில் இருந்து புறப்பட்டபோதே ஒன்றையொன்று முந்துவதற்கு போட்டியிட்டுச் சென்றன என அவற்றில் பயணித்த பயணிகள் தெரிவித்தனர்.

கல்லுண்டாயில் இ.போ.ச பேருந்து முன்னே சென்று கொண்டிருந்தபோது பின்னால் வேகமாக வந்ததனியார் பேருந்து முந்திச் செல்ல முற்பட்டபோது இ.போ.சபேருந்தின் முன் பக்கம் மோதி விபத்துக்குள்ளானது. இதனால் இ.போ.ச. பேருந்தின் முன்பக்கம் சேதமடைந்தது.

இதன்போது இ.போ.ச பேருந் தில் பயணித்த ஒருவர் வெளியே தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். இரு பேருந்துகளிலும் நின்ற வாறு பயணித்தவர்கள் உள்ளே வீழ்ந்துகம்பிகளுடன்மோதுண்டு பாதிக்கப்பட்டனர்.

இந்த விபத்தைத் தொடர்ந்து மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் ஒரு மணித்தியாலத்திற்கு பின்னரே பொலிஸார் அங்கு வருகைதந் தனர் என மக்கள் தெரிவித்தனர். இதனால்அந்தவீதியூடாகபோக்கு வரத்து நெருக்கடி ஏற்பட்டது.

பொலிஸாரின் அசமந்தம் காரணமாகவே இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறுக் கார ணம்எனபயணிகள் குற்றம் சாட்டி னர். விபத்துக்களில் ஈடுபடும் பேருந்துகளில் சாரதிகளை பல சந்தர்ப்பங்களில் பொலிஸார் காப்பாற்ற முயற்சிக்கின்றனர் எனவும் மக்கள் விசனம் வெளி யிட்டுள்ளனர். (ம)

# தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தை சொந்த மொழியில் வழங்க வேண்டும்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

வவுனியா, செப்.10

போக்குவரத்து விதியை மீறிய சாரதி ஒருவருக்கு பொலிஸார் தண்டப்பணம் அற விடுதல் மற் றும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் போது அந்தச் சாரதிக்கு தெரிந்த மொழியி லேயே அதை வழங்க வேண் டும். வேறு மொழியில் வழங்கி அவரது மொழி உரிமையை மீற முடியாது

– இவ்வாறு, இலங்கை மனித வுரிமை ஆணைக்குழுவின் வவு னியா பிராந்திய இணைப்பாளர் ஆர்.எல்.வசந்தராஜா பொலி ஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

போக்குவரத்து பொலிஸார் ஒருவர் எனக்கு புரியாத சிங்கள மொழியில் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கினார். இது எனது மொழி உரிமையை மீறும் செயலாகும். இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என, வவுனியாவைச் சேர்ந்த பிரசன்னா என்ற இளைஞர் கடந்த ஜனவரி மாதம் வவுனியா மனித உரிமை ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர் பில், மனிதவுரிமை ஆணைக் குழுவால்விசாரணைமேற்கொள் ளப்பட்ட பின்னர், வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப் பதிகாரிக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே மேற்படி விடயங் கள் தொவிக்கப்பட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது –

தமிழ் மொழி தெரிந்த பொது மகனுக்கு சிங்கள மொழியில் தண்டப் பணச் சீட்டடையோ அல் லது சிங்கள மொழியிலான தற் காலிக சாரதி அனுமதிப் பத்தி ரத்தையோ வழங்குவது பிழை யான நடைமுறையாகும். இச் செயற்பாடு, பொதுமகன் ஒருவ ரின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகிய மொழி உரிமையை மீறும் செயலாகும்.

எனவே, எதிர்காலத்தில் அதி காரிகள் போக்குவரத்துக் குற் றங்களுக்கு வழங்கும் சீட்டுகளை பொதுமக்களுக்கு விளங்கும் மொழியில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

புத்தூர், செப். 10

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல் லூரியின் நிறுவுநர் தினமும் பரி சளிப்பு விழாவும் இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை குமார சாமி மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

அதிபர் செல்லையா இளங் கோவின் தலைமையில் இடம் பெற உள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம் அகிலதாஸ் ஆகி யோர் கலந்து சிறப்பிக்கவுள்ள னர். (இ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வேறுபாடு எதற்காக?

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக நியமிக்கப்பட்ட அரசமைப்பு வழிகாட்டல் குழு தனது இடைக்கால அறிக்கையைத் தயார் செய்துள்ளது. அது இன்னும் பத்து நாள்களில் அரசமைப்புப் பேரவையாக நாடாளுமன்றம் கூடும்போது அதன் முன்னால் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

வழிகாட்டல் குழுவின் பரிந்துரையாக முன்வைக்கப்படும் அரசமைப்பு யோசனைகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு பிரதான கட்சியும் அரசமைப்பு விடயத்தில் தத்தமது நிலைப்பாடுகளை தனி ஆவணமாக - பின்னிணைப்பாக - அந்த இடைக்கால அறிக்கையுடன் சேர்த்து வெளியிடுவதற்காகச் சமர்ப்பித்துள்ளன. அவையும் இந்த இடைக்கால அறிக்கையுடன் வெளியாகும்.

அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஒட்டுமொத்த வழிகாட்டல் குழுவின் நிலைப்பாட்டை அந்த இடைக்கால அறிக்கை பிரதிபலிக்கும் அதேசமயம் -

புதிய உத்தேச அரசமைப்புத் தொடர்பில் ஒவ்வொரு கட்சியினதும் சுயநிலைப்பாட்டை இந்தத் தனித்தனி ஆவணங்கள் வெளிப்படுத்தி நிற்கும் என்பதும் தெளிவு.

அந்த வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடும் அதன் சார்பில் முன்வைக்கப்பட்ட ஆவணத்தினால் பிரதிபலிக்கப்படும் என்பது சரியானதே.

கூட்டமைப்பு சார்பில் அந்த வழிகாட்டல் குழுவில் இடம் பெற்ற எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்புத் தலைவருமான இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் இந்த ஆவணத்தில் ஒப்பமிட்டுக் கையளித்திருந்தனர் என்பது தெரிந்ததே.

கூட்டமைப்பின் இந்த ஆவணம் எப்போது கையளிக்கப்பட்டது என்பது தொடர்பில் இப்போது ஒரு சர்ச்சை கிளம்பியிருக்கிறது போலும்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதியே ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தரினால் அது கையளிக்கப்பட்டது என்றும், மறுதினம் ஓகஸ்ட் 30ஆம் திகதியே அந்த ஆவணம் அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுச் செயலகத்துக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது அறிக்கை வெளியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆவணம் கையளிக்கப்பட்டமை தொடர்பில் மாறுபட்ட நிலைமை ஏற்பட்டிருப்பதால் நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டிருக்கின்றது என்றும், அதனால், இதற்கான ஊடக அறிக்கை வெளியிடப்படுகின்றது என்றும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இப்படி அவர் குறிப்பிட வேண்டிய நிலைமை வந்தமைக்குக் காரணம் உண்டு.

இந்த ஆவணம் கடந்த மாத இறுதியிலேயே அரசமைப்பு உருவாக்க வழிநடத்தல் குழுவின் அலுவலகத்தில் தமிழ் கூட்டமைப்பால் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுவிட்ட போதிலும் - அத்தகைய ஆவணங்களைக் கையளிப்பதற்கு கடந்த 31 ஆம் திகதியே இறுதிக் காலக்கெடு என்றாலும் - அப்படிக் கையளிக்கப்பட்ட ஆவணத்தில் என்ன அம்சங்கள் இடம்பெற்றிருந்தன என்ற விடயத்தை கூட்டமைப்பின் தலைமை தனது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கடந்த 7 ஆம் திகதியன்றே வெளியிடப்பட்டது. அது பற்றிய செய்தி மக்களுக்கு அடுத்த நாள் 8ஆம் திகதியே கிடைத்தது. ஆனால், அதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் பேரவை அதன் இணைத் தலைவர் முதல்வர் விக்னேஸ்வரனின் தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய - பல தரப்பினரும் பங்குபற்றிய - கலந்துரையாடலின் முடிவில் ஒரு பொதுப்பிரகடனம் வெளியிடப்பட்டது. அந்தப் பிரகடன அறிவிப்பு அடுத்த நாள் புதன்கிழமை 6ஆம் திகதி மக்களுக்கு ஊடகங்கள் வாயிலாகக் கிடைத்தது. அது இணைந்த வடக்குக் கிழக்குத் தாயகத்தில் இறைமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வு என்ற விடயத்தை வலியுறுத்தி நின்றது.

அது, மக்களுக்குக் கிட்டிய அடுத்த நாளே, ஏறத்தாழ அதே விடயங்கள் அனைத்தையும் கொண்டதாக, கூட்டமைப்பின் - வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கைக்கு பின்னிணைப்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட - ஆவணம் பற்றிய தகவல் வெளிவந்தது.

இணைந்த தாயகத்தில் சமஷ்டி அடிப்படையில் அதிகூடிய அதிகாரப் பகிர்வு என்ற கூட்டமைப்பின் அந்த நிலைப்பாடு பற்றிய தகவல் சுமார் ஒரு வாரம் தாமதமாக வெளிவந்ததால், பேரவையின் பிரகடனத்தைப் பார்த்துத்தான் கூட்டமைப்பு வேறு வழியின்றி இப்படி ஒரு நிலை எடுத்துப் பகிரங்கப்படுத்தியது என சில தரப்புகள் பிரசாரப்படுத்துகின்றன என்று கூட்டமைப்புத் தலைமை கருதுகிறது போலும். அதனால்தான் இப்படித் திகதி விவரங்கள் குறிப்பிடும் அறிக்கை கூட்டமைப்புத் தலைமையிடமிருந்து வருகின்றது.

எது, எப்படி என்றாலும், பேரவையின் அண்மைய பிரகடனத்தில் கூறப்பட்ட விடயங்களின் சாரம் அனைத்தும், அந்தப் பிரகடனத்துக்கு முன்னரே கூட்டமைப்பாலும் அரசமைப்புக்கான ஆவணத்திலும் - எழுத்தில் - உள்ளன போன்றே தோன்றுகின்றது. ஆக, இறைமை, சுயநிர்ணய உரிமை போன்ற சொற்கள் இல்லை என்பதைத் தவிர.

இரு தரப்புகளும் கடைசியில் இப்படி ஒன்றைத்தான் வலியுறுத்தும் என்றால் ஏன் இந்த மோதல்? எதற்காக இந்த வேற்றுமை மார்க்கம்? தலைமைகளும், பிரிந்து நின்று மோத வழி செய்யும் பிரதானிகளும், ஊடகங்களும் சிந்திக்க வேண்டிய விடயம் இது.

# அனைவரும் இணைந்து நாட்டையும் இனத்தையும் பாதுகாக்க வேண்டும் என்கிறார் மஹிந்த!



கொழும்பு, செப். 10

அனைவரும் இணைந்து நாட்டையும் இனத்தையும் பாதுகாக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேராதனை இலுக்வத்த ஸ்ரீ புத்தகாயா மஹாவிஹாராதிபதி மல்வத்து பீட சிரேஷ்ட பதிவாளர் வண.வெல்கம்பாயே விமல புத்தி தேரரின் 76 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடைபெற்றநிகழ்வில்பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் இராணுவத் தளபதிக்கு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட போது என்னுடன் இணைந்து அவர்கள் போதி பூஜைகளை நடத்தினார்கள்.

தற்போது பௌத்த பிக்குகள் மிகவும் இழிவாக நடத்தப்படுகின்றனர். பௌத்தர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நபர் இவ்வாறு பிக்குகளை இழிவாகப் பேசுகின்றார்.

இவருக்காகவா நாம் போதி பூஜை நடத்தினோம், இவருக்காகவா நாம் குரல் கொடுத்தோம் என பௌத்த பிக்குகளுக்கு தற்போது எண்ணம் உருவாகக் கூடும்.

நாட்டையும் இனத்தையும் பாதுகாத்துக் கொள்ள அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (க)

# வீதிகள் புனரமைக்கப்படாமையால் கிளிநொச்சிப் பகுதி மக்கள் சிரமம்!

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சியில், மயில்வாகனபுரம், கொழுந்துப்புலவு மற்றும் பிரமந்தனாறு ஆகிய கிராமங்களின் முக்கிய வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று மக் கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தின், பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவில் உள்ள மயில்வாகனபுரம், பிரமந்தனாறு மற்றும் கொழுந்துப்புலவு ஆகிய மூன்று கிராமங்களிலும் 679 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இரண் டாயிரத்து இருநூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், அந்தக் கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியாகக் காணப்படும் தேராவில் - கொழுந்துப்புலவு வீதி, விசுவமடு பிரமந்தனாறு வீதி ஆகிய வீதிகள் இன்றுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை, குடியிருப்பு வீதிகளில் எந்த வீதிகளையும் இதுவரை புனரமைக்கவில்லை. இதனால், இந்த மூன்று கிராமங்களிலும் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன், இந்த மூன்று கிராமங்களிலும் வாழும் 300 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் தினமும் வேறு இடங்களுக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய நிலையில் இந்தவீதியூடாகச்சிரமங்களுக்கு மத்தியில் பயணிக்கின்றனர்.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு பிரதான வீதிகளை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொன்சேகாவைத் தக்க வைக்க ஐ.தே.க. தீர்மானிக்க வேண்டும்!

கொழும்பு, செப். 10

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை தொடர்ந்தும் கட்சியில் வைத்திருப்பதா? விலக்கி விடுவதா? என்ற விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே முடிவெடுக்க வேண்டும் என வண. எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள்இராணுவத்தளபதி ஜெகத் ஜயசூரிய போர்க் குற்றம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டை சரத் பொன்சேகா சுமத்தியமையை அடுத்து எல்லே குணவன்ச அதற்கு எதிரான கருத்தை வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து வண. எல்லே குணவன்ச, ஒரு பைத்தியக்காரர் என்று சரத் பொன்சேகா விமர்சித்திருந்தார். இந்த நிலையிலேயே இவர் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

அரசியலில்நிராகரிக்கப்பட்ட பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அடைக்கலம் கொடுத்துள்ளது.

மேலும், அவரைத் தொடர்ந்தும் அமைச்சுப் பொறுப்பில் வைத்திருப்பது அமைச்சரவையின் நன்மதிப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என வண.எல்லே குணவன்ச தேரர் குறிப்பிட்டுள்ளார். (க)

# மட்டு. ரயில் கடவை விபத்தில் ஒருவர் படுகாயம்!



மட்டக்களப்பு, செப்.10

மட்டக்களப்பு தேவபுரம் ரயில் கடவையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலத்த காயங் களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட வேளை வெதுப்பகம் ஒன்றுக்குச் சொந்தமான சிறியரக வாகனமொன்று எதிரே வந்த ரயிலுடன் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மேலும், கடந்த சில காலங்களாக இந்த ரயில் கடவையில் சேவையிலுள்ள ஊழியர்கள் உரிய முறையில் கடமையில் இல்லாதிருப்பதும், குறித்த ரயில் கடவை சேதம் அடைதிருப்பதும் விபத்துக்களுக்குரிய காரணம் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க)

## நாளை

11.09.2017
திங்கட்கிழமை
நட்சத்திரம் : பரணி மு.ப. 11.21 வரை
திதி : பஞ்சமி கா. 6.44 வரை
சஷ்டி பி.இ. 4.34 வரை
சுபநேரம் : 12.03 – 1.33 வரை
இராகுகாலம் : 7.33 – 9.03 வரை

# இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு நல்லாட்சி அரசே நல்ல சந்தர்ப்பம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

இனப் பிரச்சினைக்கான சரியான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலமே சரியான சந்தர்ப்பம். இதனை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்த் தலைவர்கள் நழுவ விடக் கூடாது.

-இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரிக்கான வகுப்பறைக் கட்டடத் தொகுதி மற்றும் அதிபருக்கான விடுதி ஆகியனவற்றை, நேற்று சனிக்கிழமை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் 30 வருட காலமாகக் கொடூர யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்தால் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் மற்றும் சொத்துக்களைத் தமிழ் மக்கள் இழக்க நேரிட்டது.



மக்களுடைய பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால், நாட்டின் அபிவிருத்தியில் பின்னடைவுகள் ஏற்பட்டன. இப்போது வரைக்கும் மக்களுடைய பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

இந்த நல்லாட்சியைப் பயன்படுத்தித் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை நல்லாட்சி அரசின் காலத்தில் தமது மதிநுட்பத்தையும்சாணக்கியத்தையும் கொண்டு தமிழ்த் தலைவர்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆகவே வடக்கு, கிழக்குத் தமிழ்த் தலைமைகளும், மலையகத் தலைமைகளும் ஒன்றிணைய வேண்டும். அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்பட்டால் மட்டுமே இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். -என்றார்.



## தீர்வின்றித் தொடர்கிறது நிலமீட்புப் போராட்டம்!

முல்லைத்தீவு, செப். 10

கேப்பாபிலவு மக்களின் தொடர் நிலமீட்புப் போராட்டம் 192 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

138 குடும்பங்களுக்கு 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி இந்தத் தொடர் போராட்டம் கேப்பாபிலவு இராணுவ முகாமிற்கு முன்பாக இடம்பெற்று வருகின்றது.

விவசாய மற்றும் மீனவக் குடும்பங்களின் காணிகள் மற்றும் கடல்வளங்களை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள நிலையில் பொருளாதார ரீதியாக மக்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, சொந்த நிலத்தில் தம்மை மீள்குடியேற்றுமாறு வலியுறுத்திக் கடந்த ஒன்பது வருடங்களாகப் பல போராட்டங்களை முன்னெடுத்த போதும், இதுவரை எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படாமையால் இந்தத் தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தை மக்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

## 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு; விரைவில் உயர்நீதிமன்றின் முடிவு!

கொழும்பு, செப். 10

இலங்கை அரசால் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பான தமது தீர்மானத்தை உச்சநீதிமன்றம் விரைவில் அறிவிக்கவுள்ளது.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 13 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் மற்றும் நீதியரசர்கள் அனில் குணதிலக, விஜித் மலல் கொட ஆகியோரைக் கொண்ட அமர்வு இந்த மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.



இந்த நிலையில், 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு குறித்த உச்சநீதிமன்றத்தின் முடிவு சபாநாயகருக்கும், அதிபருக்கும் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று தெரியவருகிறது.

## யாழில் நிதி மோசடியில் ஈடுபட்டவர் கைது!

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களை ஏமாற்றி நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப் பட்டவர் யாழ்ப்பாணம் - கல்வியன்காடு பிரதேசத்தைச் சேர்ந்த நபர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாம் இராணுவத்தில் கடமையாற்றுகிறார் எனத் தெரிவித்த பிரஸ்தாப நபர், வங்கி கடன் பெற்றுத் தருகிறார் எனத்தெரிவித்து அண்மைக் காலமாக பலரிடம் நிதி மோசடி செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் பொதுமக்கள் முறையிட்டு வந்த நிலையில், இந்த நபர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(க)

## நாளைய தினம் ஆரம்பமாகிறது 36 ஆவது ஜெனீவா கூட்டத் தொடர்

கொழும்பு, செப். 10

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 36 ஆவது கூட்டத் தொடர் நாளை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. இம்முறை கூட்டத் தொடரில் இலங்கையிலிருந்து அமைச்சர்கள் மட்டக் குழு பங்கேற்கமாட்டாது.

மாறாக, ஜெனீவாவிலுள்ள இலங்கை வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான குழுவினரே 36 ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் சார்பாக கலந்து கொள்ள உள்ளனர்.

நாளை முதலாவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தலைவரும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரும் உரையாற்றவுள்ளனர்.



இந்தக் கூட்டத் தொடரில் இலங்கையின் விவகாரங்கள் எதுவும் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை. எனினும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இலங்கைக்கான நேர உரைகளின் போது இலங்கை குறித்து கேள்வி எழுப்பும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது, ஜெனீவா அமர்வுகளின்போது பொதுவான விவாதங்களின்போது பல்வேறு தலைப்புக்களின் கீழ் உரையாற்றவுள்ள சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இலங்கை தொடர்பில் வலியுறுத்தல்களை மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை என்பன இலங்கை குறித்து வலியுறுத்தல்களை விடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இதேவேளை, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கை தொடர்பில்பல்வேறு உபகுழுக் கூட்டங்களை ஜெனீவா வளாகத்தில் நடத்தவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைமை குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது. இலங்கையிலிருந்து சில பொது அமைப்புக்கள் இம்முறை ஜெனீவாவுக்கு விஜயம் செய்து இவ்வாறான உப குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, இலங்கை உட்பட பல்வேறு நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஆராயும் ஐ.நாவின் விசேட குழு ஒரு நீண்ட அறிக்கையை ஐ.நா. மனித உரிமை பேரவையின் 36 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பித்திருக்கிறது.



# தாய்ப்பாலில் புதிய நுண்ணுயிர்க் கொல்லி கண்டுபிடிப்பு



தாய்ப்பாலில் பல வகை நோய் எதிர்ப்புச் சக்திகள் காணப்படுகின்றமை நாம் அறிந்ததே. எனினும் இதுவரை காலமும் கண்டறியப்படாமல் இருந்த புதிய வகை நுண்ணுயிர்க் கொல்லி தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

Vanderbilt பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழு ஒன்றே இந்தப் புதிய நுண்ணுயிர்க் கொல்லியைக் கண்டுபிடித்துள்ளது.

இந்த நுண்ணுயிர்க் கொல்லி தாய்ப்பாலில் உள்ள புரதத்தின் ஊடாக சிறிது சிறிதாகக் குழந்தைக்குக் கடத்தப்படுகின்றது. அதன் பின்னர் குழந்தைகளில் ஏற்படும் அநேகமான பக்டீரியாத் தாக்கங்களை எதிர்த்து இந்த நுண்ணுயிர்க் கொல்லி போராடுகின்றது.

செயற்கையாகப் பயன்படுத்தப்படும் நுண்ணுயிர் கொல்லிகளில் நச்சுப் பதார்த்தங்கள் கண்டிப்பாக இருக்கும் எனவும், ஆனால், தாய்ப்பாலில் இருந்து கிடைக்கும் இந்த நுண்ணுயிர்க் கொல்லியில் சிறிதளவும் நச்சுப் பதார்த்தங்கள் இல்லை எனவும் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# புத்திசாலிப் பெண்களை திருமணம் செய்ய

## ஆண்களுக்கு பிடிக்காதாம்!

பொதுவாக ஆண்களில் சிலர் தனது மனைவி தன்னை மீறி எதையும் செய்யக் கூடாது, தனக்கு அடுத்த படியில் தான் மனைவி என்பவள் இருக்க வேண்டும் என்று ஆணாதிக்க சிந்தனையில் இருப்பார்கள்.



ஆண்கள் தங்களை விட புத்திசாலியாக இருக்கும் பெண்களை திருமணம் செய்துகொள்ளத் தயங்குவார்கள் என்று சில உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக ஆண்களில் சிலர் தனது மனைவி தன்னை மீறி எதையும் செய்யக் கூடாது, தனக்கு அடுத்த படியில் தான் மனைவி என்பவள் இருக்க வேண்டும் என்று ஆணாதிக்க சிந்தனையில் இருப்பார்கள்.அதனால் தன்னை விடப் புத்திசாலியாக இருக்கும் பெண்களை தனது வாழ்க்கைத் துணையாகத் தேர்வுசெய்ய மறுத்து விடுவார்கள். அதிலும் சில ஆண்கள் புத்திசாலிப் பெண்ணாக இருந்தால், அவர்கள் சுயமாக இயங்க விரும்புவார்கள் என்றும் அவர்களுக்குத் தனியாக வாழ்வதற்குத் தைரியம் அதிகமாக இருக்கும் என்று நினைப்பார்கள்.

அதனால், வாழ்க்கைத் துணை கூறுகின்றமையை சற்றும் கேட்காமல் அவர்களின் விருப்பப்படி வாழ்வார்கள் என்பதற்காகவும் ஆண்கள் அத்தகைய பெண்களைத் திருமணம் செய்துகொள்ள விரும்பமாட்டார்கள். எனவே தான் ஆண்களில் சிலர் தனது துணையைத் தேர்வுசெய்யும் போது தன்னை விடக் குறைவாகப் படித்திருக்கும் பெண்ணைத் திருமணம் செய்துக்கொள்ள வேண்டும் என்று நினைப்பார்கள்.

ஏனெனில், பெண்கள் ஆண்களை விட அதிகமாகப் படித்திருப்பார்களாயின், அவர்களின் வாழ்க்கையில் சில சமயத்தில் தாழ்வுமனப்பான்மை பிரச்சினைகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. ஆனால் பல வெற்றிகரமான ஆண்களுக்குப் பின் அறிவார்ந்த புத்திசாலிப் பெண்கள் உண்டு என்பதே உண்மை.



# நித்திரையை தியாகம் செய்யாதீர்கள்!

## பெண்களே உஷார்

ஆண்களைவிட அதிக நித்திரை பெண்களுக்குத் தான் அவசியம். ஆனால், உண்மையில் அவசியமான அளவு நித்திரைகூட அவர்களுக்குச் சாத்தியப்படுவதில்லை. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு நித்திரை என்பது கனவு தான். இப்போது மட்டுமல்ல. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெண்கள் உறங்கும் நேரம் என்பது மிகவும் குறை வாகவே உள்ளது. கணவன் வரும் வரை சாப்பிடாமலும், உறங்காமலும் இருப்பது போன்ற வழக்கங்களால், பெண்கள் தாங்களாகவே உறங்கும் நேரத்தைக் குறைத்து விட்டார்கள். 70 வீதமான பெண்கள் தங்களுக்குத் தூக்கமின்மைப் பிரச்சினை இருப்பதையே அறியாமல் இருப்பதுதான் வேதனை.

இன்றைய காலகட்டத்திலோ, பெண்கள் நினைத்தால்கூட உறங்குவதற்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை.

கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்லும் சூழலில் காலை முதல் இரவு வரை பெண்களுக்கு வேலை ஓய்வதில்லை. என்னதான் கணவர் வீட்டுவேலைகளைப் பகிர்ந்துகொண்டாலும் பெண்களுக்குத் தான் கூடுதல் வேலைகள் இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இரவு நேரப் பணி என்பதும் நமது உடலுக்கு ஒவ்வாத விடயமே.

பகலில் உழைப்பதும், இரவில் உறங்குவதுமே இயற்கையின் நியதி. இந்தச் சக்கரத்தை மாற்றி பகலில் உறங்கி, இரவில் வேலை செய்வதை நம் மனமும் உடலும் ஏற்றுக் கொள்ளாது.

மேலும், நம்மை உறங்க வைக்கும் 'மெலட்டோனின்' என்கிற ஹோர்மோன் இரவில் அதிகம் சுரக்கும்.

தூக்கமின்மை காரணமாக ஆரம்ப காலகட்டத்தில் கண் எரிச்சல், தலைவலி, மைக்ரேன் எனப்படும் தீராத தலைவலி போன்ற பிரச்சினைகளால் அவதிப்படுவார்கள். இவை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் மாதவிடாய் குழப்பங்கள் உண்டாகும். குழந்தையின்மை போன்ற பெரிய பிரச்சினைகளுக்கு ஆரம்பமாக அமைந்துவிடும்.

கண்டுகொள்ளாமல் விட்டாலோ, சில ஆண்டுகளிலேயே இரத்த அழுத்தம், இதயநோய், பக்கவாதம், நீரிழிவு வரை கொண்டு சென்று விடும். தூக்கமின்மை என்பது, நமது உடல் நலனில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத் தும் என்பதால் உடனடியாக மருத்துவரை அணுகு வதே சிறந்த வழி.

# பாலியல் குற்றம்சாட்டப்பட்ட சர்ச்சைக்குரிய பா.ஜ.க. தலைவருடன் திலக் மாரப்பன சந்திப்பு!

கொழும்பு, செப். 10

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை, பாலியல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்ட சர்ச்சைக்குரிய பா.ஜ.க. தலைவர் ஒருவரே முதலில் சந்தித்துப் பேசியுள்ளார்.

மூன்று நாள்கள் விஜயம் மேற்கொண்டு புதுடில்லி சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை, பா.ஜ.க வின் தலைவர்களில் ஒருவரான, விஜய் ஜோலி நேற்று முன்தினம் இரவு சந்தித்து, மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றார்.



இதையடுத்து, இவர்கள் பேச்சுகளையும் நடத்தியுள்ளனர்.

புதுடில்லி சட்டமன்ற முன்னாள் உறுப்பினரான விஜய் ஜோலி பா.ஜ.கவின் வெளிநாட்டு விவகாரப் பிரிவின் முன்னாள் தலைவராவார்.

பா.ஜ.கவின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினராக இருக்கும் இவர், மீது பெண் ஒருவர் பாலியல் குற்றச்சாட்டைச் சுமத்தியதை அடுத்து, அவருக்கு எதிராக புதுடில்லி காவல்துறை பாலியல் வல்லுறவு உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் குர்கானில் உள்ள விடுதி அறை ஒன்றில், தனக்கு மயக்க மருந்து கொடுத்து, விஜய் ஜோலி, வல்லுறவுக்குட்படுத்தியதாக பெண் ஒருவர் குற்றம்சாட்டியிருந்தார். எனினும் விஜய் ஜோலி அதனை மறுத்திருந்தார்.

வல்லுறவுக் குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ள சர்ச்சைக்குரிய பா.ஜ.க. தலைவர் ஒருவரே, இலங்கை வெளிவிவகார அமைச்சரைப் புதுடில்லியில் முதன் முதலில் சந்தித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

# ‘சில்’ துணி வழக்கு உங்கள் மீதும் பாயும்; மைத்திரி மனைவியை எச்சரிக்கும் மஹிந்த!

கொழும்பு, செப். 10

தற்போதைய முதல் பெண்மணி மீதும் கூட சில் துணிகளை விநியோகம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார் என்று வழக்கும் தொடுக்கப்படலாம் என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேலும் தெரிவிக்கையில்-

‘சில நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரது பாரியார் சகிதம் சில் துணிகளை விநியோகித்திருந்தார்.

அதனைப் பார்த்துக் கொண்டிருந்தார் என்று தற்போதைய முதல் பெண்மணி மீதும் வழக்குத் தொடுக்கப்படலாம்.



3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள லலித் வீரதுங்கவை சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிடவுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, தொலைத் தொடர்புஒழுங்கமைப்பு ஆணைக் குழுவின் 60 கோடி ரூபா நிதியைத் தவறாகப் பயன்படுத்தி, பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய ‘சில்’ துணிகளை விநியோகித் தார்கள் என்று லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பல்பிட்ட ஆகியோர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே, மைத்திரிபாலசிறிசேனவுடன்இணைந்து சில் துணிகளை வழங்கிய அவரது துணைவியாருக்கு மஹிந்த ராஜபக்ஷ மறைமுக எச்சரிக்கையை விடுத்துள்ளார்.



# திலக் மாரப்பனவுக்கு புதுடில்லியில் வரவேற்பு!

கொழும்பு, செப். 10

இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன மூன்று நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் மாலை புதுடில்லியை வந்தடைந்தார். அவரை இந்திரா காந்தி விமான நிலையத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும், புதுடில்லியில் உள்ள சிறிலங்காவின் தூதுவர் சித்ராங்கனி வகீஸ்வரா உள்ளிட்ட அதிகாரிகளும் வரவேற்றனர்.

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற பின்னர், முதல் வெளிநாட்டுப் பயணத்தைமேற்கொண்டுள்ள திலக் மாரப்பன, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், உள்ளிட்டோரைச்சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று, திலக் மாரப்பன தனது பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பவுள்ளார்.

# அமெரிக்க, சீன பாதுகாப்பு ஆலோசகர்கள் இலங்கை கடற்படைத் தளபதியுடன் பேச்சு!







கொழும்பு, செப். 10

இலங்கையின் கடற்படைத் தளபதியாக அண்மையில் பதவியேற்ற வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவை, அமெரிக்க, சீன பாதுகாப்பு ஆலோசகர்கள் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

அமெரிக்க தூதரக பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் டக்ளஸ் ஹெஸ் கடந்த வியாழக்கிழமை இலங்கைக் கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்று, வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவைச் சந்தித்தார்.

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த அதிகாரியான லெப். கொமாண்டர் பிரையன் பேஜும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து கலந் துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பில் உள்ள சீன தூதரகத்தின் இராணுவ, கடற்படை, மற்றும் விமானப்படை பாதுகாப்பு ஆலோசகரான கேணல் சூ ஜியன்வெய் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படைத் தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பரந்துபட்ட விவகாரங்கள் குறித்துக்கலந்துரையாடப்பட்டுள்ளது.

# வேலைநிறுத்தத்துக்கு தயாராகும் சுகாதாரப் பரிசோதகர்கள்!

கொழும்பு, செப். 10

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து பொதுசன சுகாதாரப் பரிசோதகர்களை கட்டாய இடமாற்றத்துக்கு உட்படுத்தியமை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடெங்குமுள்ள பொதுசன சுகாதாரப் பரிசோதகர்கள் அடுத்த வாரம் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தங்களது கோரிக்கைகளை முன்வைத்து உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடர்ந் திருக்கின்றனர் என்றும் தாங்கள் எதிர்பார்க்கும் தீர்வுகள் கிடைக்காவிட்டால் மறு அறிவித்தல் எதுவுமின்றி நாடெங்கும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கவுள்ளனர் என்றும் பொதுசன சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை தாங்கள் மேற்கொண்ட அடையாள வேலைநிறுத்தத்துக்கு எவ்வித பலாபலனும் கிடைக்காததால் காலவரையறையற்ற போராட்டத்தில் இறங்க முடிவு செய்திருக்கிறோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**10.09.2017 16.09.2017**

**சந்திராஷ்டமநாள்:** உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2 ஆம் கால்கள், ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித் திங்கள் 25 ஆம் நாள் சதுர்த்தசித்திதி காலை 7.24 மணிவரை. அதன் மேல்பஞ்சமிபி.இ. 5.24 மணிவரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: அச்சுவினிபகல்10.37மணிவரை. பின்னர் பரணி. மரணயோகம் காலை 7.24 மணிவரை. அதன்மேல் சித்தம் பகல் 10.37 மணி வரை. பின்னர் அசுபயோகம். பிறந்தநட்சத்திரவழிபாடு: பரணி.*

ராகுகாலம்:- *மாலை 4.40 மணிமுதல் 6.11 மணிவரை.*

சுபநேரம்:- *காலை 9.04 மணி முதல் 10.34 மணி வரை.*

திவசம் செய்ய வேண்டிய திதி:- *ஆவணி மாத தேய்பிறை பஞ்சமி.*

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)



## மேஷம்:

இனிமையானவாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். பகையாய் இருந்த உறவினர்கள் வந்து சேர்வார்கள். அசையும், அசையாச் சொத்துக்கள், ஆடை, ஆபரணங்கள் சேரும். படித்து முடித்தவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் கிடைக்கும். பழைய நண்பர்களால் சந்தோஷம் கூடும். தொழில், வியாபாரத்தில் சிரமங்கள் குறைந்து முன்னேற்றம் ஏற்படும். செய்யும் தொழிலில் இதுவரை இருந்த பிரச்சினைகள் தீர்ந்து நன்மைகள் நாடிவரும். முக்கியமான காரியங்கள் பலிதம் ஆகும். சிலருக்கு திருமண யோகம் கூடிவரும்.



## ரிஷபம்:

சலனம் மிகுந்த வாரம். மனதில் ஒருவித கவலை சஞ்சலம் காணப்படும். தனவரவு குறையும். கடன் பளு ஏறும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உடல் நோய் வாய்ப்பட்டு மருத்துவச் செலவுகள் உண்டாகும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவார்கள். வியாபாரத்தில் போட்ட முதலீடுகளில் நஷ்டமுண்டாகும். உத்தியோகத்தர்கள் வேலையில் கவனக்குறைவால் உயர் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஈடுபாடு குறையும். திருமண காரியங்கள் இழுபறி நிலையில இருக்கும்.



## மிதுனம்:

ஆக்கபூர்வமான வாரம். தொட்டது துலங்கும். நினைப்பவை நடக்கும். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் சிறப்பாகக் காணப்படும். தொழிலாளிகள் புதியதொழில் தொடங்குவதற்குத் திட்டமிட்டு வெற்றி அடைவார்கள். பூர்வீக வழியில் உள்ள சொத்துகள், பணங்கள், பொக்கிஷங்கள் தேடாமலேயே வந்து சேரும். உடல்நிலை முன்னேற்றம் அடையும். குடும்ப உறுப்பினர்களின் பிரச்சினைகள் விலகும். தொழிலில் இருந்து வந்த போட்டி, பொறாமைகள் விலகும்.



## கடகம்:

மத்திமமான வாரம். பணவரவு சுமாராக இருக்கும். வீண் அலைச்சல், உடல் நிலையில் மந்தமான நிலை ஏற்படும். உத்தியோகத்தர்கள் உடன் பணிபுரிபவர்களிடம் மிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். குடும்ப உறவு ஓரளவு சீராக இருக்கும். வியாபாரத்தில் சுமாரான முன்னேற்றம் காணப்படும். தொழிலாளர்களுக்கு பாடுபட்டதன் பலன்குறையும் மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் எடுக்க வேண்டும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம். அயலவர்களுடன் எச்சரிக்கையாகப் பழக வேண்டும்.



## சிம்மம்:

மகிழ்ச்சியான வாரம். பணம் எல்லா வழியாலும் வந்துசேரும். குடும்ப உறவு பலப்படும். உடல்நலம் ஆரோக்கியம் அடையும். வெளிநாட்டு உறவினரிடமிருந்து ஒரு நல்ல செய்தி வரும். நீண்டநாள் கனவு நனவாகும். பிரிந்திருந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். நெடுநாளைய குடும்பப் பிரச்சினைகள் ஒரு முடிவுக்கு வரும். செய்தொழிலிலும், அலுவலகத்திலும் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். நீண்டகாலம் காணாதிருந்த இளைய சகோதரரைக் கண்டு மகிழ்வார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.



## கன்னி:

அலைச்சல் மிகுந்த வாரம். பணம் பற்றாக்குறையாக இருப்பதால் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் கடன் வாங்க அலைவார்கள். சிலர் தேகநலம் குன்றி மருத்துவ உதவியை நாடுவார்கள். சிலருடைய வீட்டில் பொருள்கள் களவு போய்க் காவல் நிலையத்தின் உதவியை நாடுவார்கள். மாணவர் கள் தம் பகுதிநேர வகுப்புகளுக்கு தகுந்த ஆசிரியரைத் தேடுவார்கள். சிலர் வெளிநாடு செல்ல எண்ணி தகுந்த முகவரின் உதவியை நாடுவார்கள். சிலர் தொழில், இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள்.



## துலாம்:

மத்திமமான வாரம். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தேகநிலை பாதிப்புற்று மருத்துவச் செலவுகள் உண்டாகும். தொழிலில் கடினமான உழைப்பு இருக்கும். முயற்சித்த எக்காரியமும் தாமதத்தின்மேல் பலிதமாகும். மாணவர்கள் தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்கள் பெறுவதற்கு அதிகம் பாடுபட வேண்டியிருக்கும். சகோதர உறவு மேம்படும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. வெளிநாட்டுப் பயணம் தீவிர முயற்சியின் மேல் அனுகூலமாகும். பயணத்தின் போது அவதானமாக இருக்க வேண்டும்.



## விருச்சிகம்:

மேன்மையான வாரம். பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்ப ஒற்றுமை வலுவடையும். உத்தியோகத்தர்கள் தம் பணியை திறம்படச் செய்து பாராட்டைப் பெறுவார்கள். திருமணம் கைகூடி வரும். வியாபாரம் மேன்மை அடையும். நண்பர்களால் சந்தோஷம் கூடும். பேச்சுத் திறமையால் பல காரியங்களைச் சாதிப்பார்கள். சமூகத்தில் செல்வாக்கு, அந்தஸ்து கூடும். மாணவர்கள் கல்வியில் முதன்மை அடைவார்கள். அரசியல்வாதிகளின் செல்வாக்கு அதிகரிக்கும். சுயதொழிலில் சிலர் முன்னேற்றம் அடைவார்கள்.



## தனுசு:

நன்மையானவாரம். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் மனமகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். பெண்களால் பெருமை தேடிவரும். கடின உழைப்பால் வெற்றி மேல் வெற்றி உண்டாகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவி, ஒத்தாசை புரிவார்கள். வெளியூர், வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். தொழில், வியாபாரம் லாபம் தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். திருமணப் பேச்சுகள் வெற்றியைத் தரும். கொடுக்கல், வாங்கலில் புரிந்துணர்வு அதிகரிக்கும்.



## மகரம்:

யோசனையான வாரம். வருமானம் குறைவாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமையாகச் செயற்படுவது கடினம். தொழிலில் அலைச்சல்கள் அதிகரிக்கும். வேலை விஷயத்தில் கூடுதல் பொறுப்பு வரும். திருமணப்பேச்சில், சிறுசிறு பிரச்சினைகள் தோன்றும். உடல்நலம் பாதிப்படையும். சொத்து விஷயமாக விரயச் செலவுகள் ஏற்படும். பணவிஷயத்தில் எச்சரிக்கையாக இருக்காவிட்டால் வம்பில் மாட்டிக் கொள்ள நேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். பெண்களின் அபிலாஷைகள் நிராசையாகிவிடும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.



## கும்பம்:

சமபலன்கள் உள்ள வாரம். பொருள்வரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் ஓரளவு அனுகூலமான சூழ்நிலை காணப்படும். உடன் பிறந்தவர்களால் தொல்லைகள் வரும். வியாபாரத்தில் மந்தநிலை நீடிக்கும். நண்பர்களுடன் ஓரளவு தள்ளி நின்று பழகுவது நல்லது. மன உளைச்சல் காரணமாக உடல்நலம் பாதிப்படையும். வைத்தியச் செலவுகளும் உண்டாகும். தொழிலில் கடின உழைப்பு இருக்கும். திருமண முயற்சிகள் தாமதத்தைத் தரும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். பயணத்தின்போது உடைமைப் பொருள்களில் கவனம் தேவை.



## மீனம்:

சுபீட்சமான வாரம். பண விஷயம் திருப்தியாக இருப்பதால் மனதில் உற்சாகம் தலை தூக்கி நிற்கும். குடும்பத்தில் பெரும்புகழும், செல்வாக்கும் அதிகமாகும். ஸ்திரச்சொத்து வாங்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். திருமணத் தடை விலகி, நல்ல படியாக ஒப்பேறும். உறவினர்கள், ஒத்துழைப்புக் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து இனிப்பான செய்திகள் வரும். கூட்டுத்தொழில் சிறப்பாக நடக்கும். வாகன வசதிகள் உண்டாகும். சிலருக்கு ஆன்மீகப் பயணம் அனுகூலமாகும். நல்லவர்களின் நட்பால் அதிக நன்மை அடைவார்கள்.

# இவ் வருட நவராத்திரி ஆரம்பம் எப்போது?

## பஞ்சாங்கங்களால் மக்கள் குழப்பம்!

ஜோதிடமணிபிரம்மஸ்ரீ **சி. ஜெகதீஸ்வரசர்மா**

*சிலர் நவராத்திரி இரவில் செய்யும் பூஜை அல்லவா. இரவில் அமாவாசையில்லை தானே! ஆகவே, 20-09-2017 புதன்கிழமை அமா வாசை முடிந்த பின் கும்பம் வைத்து நவராத்திரி ஆரம்பம் கொள்ளலாம் எனச் சொல் வார்கள். நவராத்திரி கும் பஸ்தாபனம் காலையில்தான் செய்யவேண்டு மென்று ஆகமங்கள் கூறுகின்றன.*

சக்தியை நாயகி யாகப் போற்றும் நவராத்திரி விழா ஒரு கலாசார விழுமியங்களைப் பேணுகின்ற சக்தியின் மகிமையைப் போற்றுகின்ற கல்வி, வீரம், செல்வம், கலை, தொழில் என்பவற்றில் இறையுணர்வைப் பிரதிபலிக்கின்ற ஒரு விழாவாகும். இதனால்தான் சிவராத்திரிக்கு இல்லாத முக்கியத்துவமும், பிரபல்யமும் சக்தி விழாவாகிய நவராத்திரிக்கு உண்டு.

இந்த விழா ஆலயங்களில் சமய வைபவமாக மட்டு மல்லாமல் இல்லங்கள், பொதுமன்றங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வேலைத் தளங்கள் என எல்லா இடங்களிலும் சரஸ்வதி பூஜை என்றும் கலைவிழா என்றும் காலங்காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பலவிதத்திலும் சிறப்பு பெற்ற நவராத்திரி விரத ஆரம்பம் எப்போது என்பதில் இரு பஞ்சாங் கங்களிடையே குழப்பம் நிலவுவதால் மக்களுக்கு ஆதாரபூர்வமாகச் சரியான தினத்தைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு உண்டு.

அதாவது திருக்கணித பஞ்சாங்கப் பிரகாரம் 21-09-2017 வியாழக் கிழமை என்றும், வாக்கிய பஞ்சாங் கப்படி 20-09-2017 புதன்கிழமை எனவும் குறிக்கப்பட்டுள்ளன.

இனி நவராத்திரி ஆரம்பத்தை நிர்ணயிப்பதற்கான பிரமாணங்களை ஆராய்வோம். இவ்விரதம் சாந்திரமாத அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்படும். அதாவதுசந்திரனைக் கொண்டுகணக்கிடப்படும் காலம் என்றுபொருள்படும். பொதுவாக தட்சிணாயனத்தில் வரும் விரதங்களில் பெரும்பாலானவை சாந்திரமான அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுவன. அதன் பிரகாரம் சாந்திரமாத ஆஸ்விஜ சுத்தப் பிரதமையன்று நவராத்திரிவிரதம் ஆரம்பிக் கப்பட வேண்டும் என்று காரணாகம சுலோகம் கூறுகின்றது.

"ஆஸ்வயுக் சுக்லபக்ஷேது
ப்ரதிபந் நவம்யந்தகே
ப்ரதிபத்தினமாரப்ய
விரதோத்ஸவ மதாசரேத்"

இதன்படி, அமாவாசை சேராத பிரதமையில் நவராத்திரிவிரதம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்பது தெளிவாகின்றது. இதுபொதுவிதி.

அமாவாசை சிறிது நேரம் இருக்க பின் பிரதமைதொடங்கி அன்றே பிரதமை முடிவடைந்தால் அன்றுதான் நவராத்திரிஆரம்பம். இதுசிறப்பு விதி.

*"வர்ஜ நீயாப்ரயத்னேன
அமாயுக்தாது பார்த்திவ
த்வியாதி குணைர்யுக்தா
ப்ரதிபத் சர்வகாமதா"*

இதன்படி, எம் முயற்சி எடுத்தாவது அமாவாசையுடன் சேர்ந்த பிரதமையைநீக்கவேண்டும். அத்துடன் துவிதீயையுடன் கூடிய பிரதமை எல்லாவிருப்பங்களையும் கொடுக்கக் கூடியதாகும் என்று ஸ்கந்தபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"யதிகுர்யாத் அமாயுக்தாம்
பிரதிபத் ஸ்தாபனேமம
தஸ்யசாபாயுதம் தத்வா பஸ்ம
சேஸம் கரோம்யஹம்"*

அதாவது அமாவாசை சேர்ந்த பிரதமையில் எவன் எனக்கு நவராத்திரி பூஜை ஆரம்பிக்கின்றானோ அவனுக்கு சாபம் கொடுத்துஅவனைச் சாம்பலாகச் செய்வேன் என்றுதேவி கூறுகிறாள் என தேவீ புராணத்தில் உள்ளது. மேலும் தேவீபுராணத்தில்,

"அமாயுக்தா ஸதாசைவப்ர
திபந் நிந்திதாமதா
தத்சேத் ஸதாபயேத் கும்பம்
துர்பிக்சம் ஜாயதேத்ருவம்"



அமாவாசையுடன் சேர்ந்த பிரதமையில் கும்பஸ்தாபனம் செய்வதால் நிச்சயமாக நாட்டில் வறுமை ஏற்படும். அமாவாசையுடன் சேர்ந்த பிரதமை விலக்கப்பட வேண்டும்.

"அமாயுக்தா நகர்த்தவ்யாப்ரதிபத்
பூஜனேமாம முகூர்த்த
மாத்ராகர்த்தவ்யாத்
விதியாதி குணான்விதா"

அதாவது, அமாவாசையுடன் சேர்ந்த பிரதமைத் திதியன்று எனக்கு நவராத்திரிபூஜை செய்யக்கூடாது. இப் பிரதமையானதுதுவிதீயையுடன் சிறிதுநேரமாவது சேர்ந்திருந்தால் அத்தினத்தில் பூஜை செய்வது சிறந்தது என்பதாகும். இதிலிருந்து அமாவாசையுடன் கூடிய பிரதமையில் ஆரம்பம் கொள்வது தவறென்பதும் துவிதியையுடன் கூடிய பிரதமை சிறப்புடையது என்பதும் தெரிகின்றது.

கடந்த வருடம் ஆந்திரா விஜய வாடாவில் நடைபெற்றபஞ்சாங்க சதஸில் இது சம்பந்தமாகதர்ம சாஸ்திர விற்பன்னர்களால் பல விளக் கங்கள் கொடுக்கப்பட்டு 21-09-2017 அன்று நவராத்திரி ஆரம்பம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அதன்படி, இந்தியாவில் வெளிவந்த ஏவிளம்பி வருட சகலதிருக்கணித, வாக்கிய பஞ்சாங்கங்கள் யாவற்றிலும் 21-09-2017 அன்று நவராத்திரி ஆரம்பம் குறிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள ஆலயங்கள் யாவும் இவ்வாறே நவராத்திரிஆரம்பம் செய்வதாகஅறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட ஆதார சுலோகங்களின் பிரகாரம் திருக்கணித பஞ்சாங்கப்படி 20-09-2017 அன்று பகல் 10-59 வரையும் அமாவாசை நிற்கின்றது. மறுநாள் பிரதமைபகல் 10-35 வரை வியாபித்திருப்பதால் 21-09-2017 வியாழக்கிழமை நவராத்திரிஆரம்பம் குறித்தமை சரியாகவே உள்ளது. (ஆஸ்வீஜ சுத்தம் அன்றேபோடப்பட்டுள்ளது.)

இதேநேரம், வாக்கிய பஞ்சாங்கப் படி 20-09-2017 புதன்கிழமைபகல் 11-23 வரை அமாவாசையும், மறுநாள் பகல் 11-02 வரை பிரதமையும் நிற்கின்றன. இந்தப் பஞ்சாங்கப்படி 21-09-2017 வியாழக்கிழமை ஆஸ்வீஜ சுத்தப் பிரதமை குறிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, 21-09-2017 அன்றே நவராத்திரி விரத ஆரம்பம் கொள்ளவேண்டுமென்பதுதெள்ளிதிற் புலனாகின்றது.

சிலர் நவராத்திரி இரவில் செய்யும் பூஜை அல்லவா. இரவில் அமாவாசையில்லைதானே! ஆகவே, 20-09-2017 புதன்கிழமை அமாவாசை முடிந்த பின் கும்பம் வைத்து நவராத்திரி ஆரம்பம் கொள்ளலாம் எனச் சொல்வார்கள். நவராத்திரி கும் பஸ்தாபனம் காலையில்தான் செய்யவேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஆகமப்பிரமாண முறையில் 21-09-2017 வியாழக்கிழமை நவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும்படி இந்துமக்களைக் கேட்டுக்கொள்வதுடன், தமது தவறுக்கு நியாயம் கற்பிப்பதை விடுத்து தவறை மனிதநேயத்தோடு தவறெனஏற்றுக் கொண்டுமக் களைநல் வழிப்படுத்த வேண்டுமென வாக்கியபஞ்சாங்க கர்த்தாக்களைவிநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த விடயத்தில் இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களமும், இந்து மாமன்றமும் கவன மெடுத்து இந்து மக்களுக்குசரியான விளக்கம் கொடுக்க வேண்டும் எனவும் வேண்டு கோள் விடுக்கின்றேன். ★

காலைக்கதிர் Kalaikkathir



# போர்ச் சூழலும் ஊடகத்துறையும்

## அற்புதமான பத்திரிகையாளர் குருநாதன்

பி.மாணிக்கவாசகம்

மிகவும் அமைதியானவர். அதிர்ந்து பேசமாட்டார். ஆனால் அவருடைய எழுத்துக்கள் மிகவும் ஆழமானவை. எழுத்தின் மூலம் கருத்துக்களை அச்சொட்டாக வெளியில் கொண்டு வருவதில் வல்லவர். கூட்டங்களில் ஆற்றப்படுகின்ற உரைகளை மிகவும் இலாவகமாக எழுத்தில் வடிக்கும் ஆற்றல் பெற்றவர். அசுர வேகத்தில் எழுதும் ஆற்றல் இயற்கையாகவே வரப்பெற்றிருந்தார். அவர் வேறு யாருமல்லர். அவர்தான் குருநாதன். திருகோணமலையைச் சேர்ந்த ஊடகவியலாளர் சின்னையா குருநாதன்.

திருகோணமலையில் தனது ஊடகத்தொழிலை ஆரம்பித்த அவர் யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகையில் பணியாற்றினார். அதன் பின்னர் மீண்டும் தனது சொந்த ஊராகிய திருகோணமலைக்குத் திரும்பிச் சென்று அங்கு வாழ்நாள் முழுவதும் தனது ஊடகப் பணியைத் தொடர்ந்து செய்தார்.

தமிழ் மக்களுடைய அரசியல் தலைமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்பில் இருந்த காலம் அது. கூட்டணியின் அரசியல் குழு கூட்டங்கள் மாவட்டங்கள் தோறும் மாறி மாறி இடம்பெறுவது வழக்கம். அந்தக் கூட்டங்களில் காரசாரமான விவாதங்கள் இடம்பெறும். கூட்டத்தில் பங்குபற்றும் அரசியல் தலைவர்கள், முக்கியஸ்தர்கள், அனல் பறக்கும் வகையில் பேசி தங்களுக்குள் மோதிக்கொள்வார்கள்.

அந்தக் கருத்துக்களும் மோதல்களும் பத்திரிகைகளுக்கு நல்ல தீனியாகி, பரபரப்பான செய்திகளாக வெளிவருவது வழக்கம். அக்காலத்தில் தினபதி பத்திரிகை இத்தகைய செய்திகளை வெளியிடுவதில் முன்னணியில் திகழ்ந்தது. அந்தப் பத்திரிகையின் செய்தியாளராகப் பணியாற்றிய குருநாதனின் செய்திகள் விசேட தன்மையுடன் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

தமிழ் மக்களுடைய அரசியல் தலைமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்பில் இருந்த காலம் அது. கூட்டணியின் அரசியல் குழு கூட்டங்கள் மாவட்டங்கள் தோறும் மாறி மாறி இடம்பெறுவது வழக்கம். அந்தக் கூட்டங்களில் காரசாரமான விவாதங் கள் இடம்பெறும். கூட்டத்தில் பங்குபற் றும் அரசியல் தலைவர்கள். முக்கி யஸ்தர்கள். அனல் பறக்கும் வகையில் பேசி தங்களுக்குள் மோதிக்கொள்வார்கள்.

கூட்டங்களில் வெளிப்படுத்துகின்ற கருத்துக்களும், அங்கு இடம்பெறுகின்ற மோதல்களும், வார்த்தைப் பிரயோகங்களும் அப்படியே பத்திரிகைகளில் வெளிவருவதனால், கூட்டணிக்குள் அரசியல் ரீதியாக சங்கடங்கள் ஏற்படுவது உண்டு.

### ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டனர்

இதனால் மூடிய கதவுக்குள் கூட்டங்களை நடத்துகின்ற உத்தியைக் கூட்டணியின் தலைவர்கள் பின்பற்றினார்கள். அவ்வாறு வவுனியாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் குருநாதன் உட்பட சில ஊடகவியலாளர்கள் - நாங்கள் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் மண்டபத்தின் பின் வரிசையில் அமர்ந்திருந்தோம்.

மண்டபத்தின் உள்ளே ஊடகவியலாளர்கள் இருப்பதைக் கண்டதும், சில முக்கியஸ்தர்கள் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து, ஊடகவியலாளர்கள் அனைவரையும் மண்டபத்தைவிட்டு வெளியில் செல்லுமாறு அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவித்தல் சாதாரணமானதாக இருக்கவில்லை. மண்டபத்தில் இருந்து வெளியேறுவது மட்டுமல்ல. கூட்டத்தில் பேசுபவர்களுடைய குரல் கேட்கும் தூரத்திற்கு, அப்பால் ஊடகவியலாளர்கள் செல்ல வேண்டும் என்று கண்டிப்பான குரலில் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. மிகவும் பழமையான அந்த மண்டபத்தின் கதவுகள் யாவும் இறுக்கி பூட்டப்பட்டு



நாங்கள் அனைவரும் மண்டபத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தோம்.

எங்களை வெளியில் போகச் சொன்னது மட்டுமல்லாமல் பேச்சாளர்களுடைய குரல்கள் கேட்கும் எல்லைக்கு அப்பால் செல்லுமாறு அறிவித்திருந்ததை, அந்தக் கூட்டம் தொடர்பான செய்திகளைத் திரட்டுவதற்காக விசேடமாக வவுனியாவுக்கு வருகை தந்திருந்த குருநாதனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இந்தக் கூட்டத்தில் பேசப்படுகின்ற விடயங்கள் அனைத்தையும் மறுநாள் எப்படியாவது கூடிய அளவில் முழுமையாக பத்திரிகையில் செய்தியாக்கிவிட வேண்டும் என அவர் உறுதியான குரலில் கூறினார். அப்போது தினபதி பத்திரிகையின் வவுனியா செய்தியாளராகப் பணியாற்றிய வி.ஆர்.சுகுமார் உட்பட வேறு சிலரும் அவருடைய கருத்துடன் உடன்பட்டிருந்தோம்.

### பரபரப்பை ஏற்படுத்தியது

தற்போது உள்ள வசதிகளைப் போன்று கைத்தொலைபேசிகள் இல்லாத காலம் அது. எனவே, கூட்டத்தில் என்ன நடக்கின்றது என்பதை, கைத்தொலைபேசி ஊடாக அறிந்து கொள்ள முடியாத நிலைமை. கூட்டம் நடைபெறும்போது எவரையும் வெளியில் செல்ல அனுமதிக்கவும் மாட்டார்கள். வெளியாள்கள் எவரையும் கூட்டம் நடைபெறுகின்ற மண்டபத்திற்குள் அனுமதிக்கவும் மாட்டார்கள். கூட்டம் முடிந்த பின்னர்தான் அனைவரும் வெளியில் வருவார்கள்.

ஆனாலும், மண்டபத்தின் பலகைக் கதவுகளின் இடைவெளியிலும் ஜன்னல் கதவுகளின் இடைவெளியிலும் தீட்டிய காதை வைத்துக்கொண்டு பல மணித்தியாலங்களாக நடைபெற்ற கூட்டத்தின்போது, உள்ளே பேசப்பட்ட விடயங்களைக் கிரகித்துக் கொண்டோம். உரத்த குரலில் பேசியவர்களுடைய கருத்துக்களை ஒருவாறு கிரகிக்க முடிந்தது. குறைவான சத்தத்தில் பேசியவர்களுடைய கருத்துக்களை ஓரளவுக்கே எங்களால் கேட்க முடிந்தது.

ஆனாலும் கிரகித்த கருத்துக்களை வைத்துக் கொண்டு உள்ளே பேசப்பட்ட விடயங்களை முழுமையான செய்தியாக்கியிருந்தோம். மறுநாள் பத்திரிகைகளில் அந்தச் செய்தி முக்கியத்துவமளித்து தலைப்புச் செய்தியாக வீரகேசரி, தினபதி உள்ளிட்ட பத்திரிகைகளில் வெளிவந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

அதிலும் குறிப்பாக கூட்டணியைக் கூடுதலாக விமர்சிப்பதைப் பழக்கமாகக் கடைப்பிடித்திருந்த தினபதி பத்திரிகை தனக்கே உரிய பாணியில் அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தமையும் பரபரப்புக்கு முக்கிய காரணமாகும்.

இதுபோன்று கடினமான சூழ்நிலைகளில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளின் செய்திகளைக் கிரகித்து அதனை சரியான முறையில் வடிவமைக்கும் ஆற்றல் பல சந்தர்ப்பங்களில் குருநாதனிடம் இருந்து வெளிப்பட்டிருந்தது.

### ஊற்றுப் பேனை

முன்னர், எழுதுவதற்கு பொதுவாகவே ஊற்றுப்பேனையேபுழக்கத்தில் இருந்தது. அறுபதுகளின் இறுதியாக இருக்க வேண்டும். ஊற்றுப் பேனைக்குப் பதிலாக போல்பொயின்ட் பேனை அறிமுகமாகியிருந்தது. பாடசாலைகளில் ஊற்றுப் பேனையைப் பயன்படுத்திய மாணவர்கள் அப்போது புதிதாக அறிமுகமாகியிருந்த போல் பொயின்ட் பேனை மீது மோகம் கொண்டிருந்தார்கள். ஆனால் அதனைப் பயன்படுத்துவதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆரம்பத்தில் வந்த போல்பெயின்ட் பேனையின் மை மிகவும் தடிப்பாக இருந்த காரணத்தால், தாளின் மறுபக்கத்திலும். அந்த மை அழுத்தமாக பதிந்திருக்கும். அதனால் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரமே எழுதக் கூடியதாக இருந்தது. அத்துடன் அந்த மை கையில் இலகுவாக ஒட்டிக்கொள்ளும் தன்மையுடையதாகவும் இருந்ததன் காரணமாகவே மாணவர்கள் அதனைப் பயன்படுத்தக்கூடாது என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் சில காலத்தின் பின்னர் போல் பொயின்ட் பேனையின் மை ஊறிப் பிடிக்காத வகையில் தரமுயர்த்தப்பட்டதையடுத்து, பாடசாலைகளிலும் போல்பொயின்ட் பேனையின் பயன்பாடு அனுமதிக்கப்பட்டிருந்தது. அது மட்டுமல்லாமல், அலுவலகங்கள் உள்ளிட்ட பொதுத் தேவைகளிலும் போல் பொயின்ட் பேனை ஆக்கிரமித்திருந்தது.

ஆரம்பத்தில் ஊற்றுப் பேனையைப் பயன்படுத்திய ஊடகவியலாளர்களும் போல்பொயின்ட் பேனையின் வருகையையடுத்து, அதனைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால், குருநாதன் கடைசிவரையிலும் ஊற்றுப்பேனையையே உபயோகித்தார் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

### தொட்டுத் தொட்டு எழுதுவார்

ஊற்றுப் பேனை என்பது பேனைக்குள் மையை நிரப்பி அதனைப் பயன்படுத்தி எழுதுவதாகும். அக்காலத்தில் பைலட் என்ற பேனை மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. அதேவேளை பார்க்கர் பேனை மிகவும் சிறப்பான பேனையாகத் திகழ்ந்தது. பார்க்கர் பேனையைப் பயன்படுத்துவது என்பது அக்காலத்தில் மிகுந்த கௌரவம் உடையதாகக் கருதப்பட்டது.

அதிகமாக எழுதாவிட்டாலும், கையெழுத்து போடுவதற்காக மட்டும் பேனையைப் பயன்படுத்தியவர்கள்கூட கௌரவம் அந்தஸ்து என்ற அடிப்படையில் பார்க்கர் பேனையைப் பயன்படுத்தினார்கள். அத்துடன் பார்க்கர் பேனை என்பது விலை கூடியது. தரத்திலும் உயர்ந்திருந்தது. (18 ஆம் பக்கம் பார்க்க...)

(06 ஆம் பக்கம் பார்க்க...)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



91




## அத்தியாயம் - VI

## பேச்சுகளுக்கு இந்தியா கண்டனம்

அமைதியைப் பேணும் மனுவுடன் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தியப் படையினர், வடக்குக் கிழக்கில் போர்ச் சூழலைத் தோற்றுவித்து, தெற்கிலே கொந்தளிப்பும் குழப்பமும் உருவாக்கி விட்டார்கள் என்று பாலா கூறினார். ஹமீது தமது வாதத்தை முன்வைத்துப் பேசுகையில், இந்தியப் படைகளிடம் பொறுப்பிக்கப்பட்ட அதிகாரம், அமைதியைநிலைநாட்டுவதுமட்டுமல்லாமல், விடுதலைப் புலிகள் உள்ளிட அனைத்துப் போராளிக் குழுக்களிடமிருந்தும் ஆயுதக் களைவு செய்வதுமாகும் என்று வாதிட்டார். இதற்குப் பதிலளித்த பாலா, ஒப்பந்தப்படி, ஆயுதக் களைவுக்காக இந்தியப் படைகளுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் எழுபத்திரண்டு மணிநேரமே என்றும், இருபத்தி நான்கு மாதங்கள் சென்றபோதிலும் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய இந்தியப் படைகளால் இயலாது போய்விட்டது என்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன், தங்கள் பொறுப்பை நிறைவேற்ற தவறிவிட்டது என்றும் சுட்டிக் காட்டினார். அது தவிர, ஒப்பந்தத்தின் விதி ஒன்றின் படி, வடக்குக் கிழக்கு மாகாணத்தின் அனைத்து மக்களின் உயிர்க்காவலையும், பாதுகாப்பையும் இந்தியாவும் சிறிலங்காவும் இணைந்து வழங்கக் கடப்பாடுடையன என்பதைப் புலிகள் அணியினர் சுட்டிக்காட்டினார்கள். ஆயிரமாயிரம் பொதுமக்கள் உயிரிழந்து பெரும் ஆபத்துக்குள்ளானபோதும், இலங்கை அரசு வேண்டுமென்றே மௌனமாக இருப்பதாகவும் புலிகள் கண்டித்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மாகாண நிர்வாகத்தைப் பாதுகாத்துப் பேணுவதற்காகத் தமிழ் இளைஞர்களை வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்புக்கு உள்ளாக்கி, பயிற்சி வழங்கி, ஆயுதம் வழங்கி தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் பலமான இராணுவக் கட்டமைப்பை இந்தியப் படைகள் கட்டியெழுப்புகின்றன எனவும் புலிகள் முறையிட்டனர். இந்த இராணுவக் கட்டமைப்பை உருவாக்குவதால், அது தமிழ்ப் பகுதிகளில் உள்நாட்டுப் போருக்கும் இரத்தக் களரிக்கும் வழிகோலப் போகிறது என்றும் புலிப் பிரதிநிதிகள் எச்சரித்தார்கள்.

இந்திய உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்ட கருத்தறிக்கை பற்றிக் குறிப்பிட்ட புலி அணியினர், இந்திய அதிகாரிகள் தங்கள் கொழும்பு வருகையின் நோக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்றும் கூறினார்கள். தமிழர் தாயகத்தைச் சின்னாபின்னப் படுத்தி, தமிழ் மக்களுக்குச் சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்தும் போருக்கும் வன்செயலுக்கும் முடிவு கட்டவே தாம் கொழும்பு வந்திருக்கின்றனர் என விடுதலைப் புலிப் பிரதிநிதிகள் வலியுறுத்திக் கூறினார்கள். தமிழ் மக்களின் தேசிய வேணவாவை நிறைவேற்றவல்ல அரசியல் இணக்கம் ஒன்றைப் பேசித் தீர்க்கும் நோக்கத்துடனேயே தாம் கொழும்பு வந்திருக்கின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

அமைச்சர் அணியுடன் 1989 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின் போது தமிழ்ப் பகுதியில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் தொடர்பான விவரங்களே விவாதிக்கப்பட்டன. புள்ளி விவரங்கள், வரைபடங்கள் அடங்கிய நீண்ட ஆய்வு ஒன்றைச் சமர்ப்பித்த புலிகள், சுதந்திரம் கிடைத்த காலத்தில் இருந்து, கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியான குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், இந்தக் குடியேற்றத் திட்டங்கள் அரசால் நடத்தப்படுபவை என்றும் வாதிட்டார்கள். இனப் போராட்டத்தின் முக்கிய காரணிகளில் ஒன்று, திட்டமிட்ட குடியேற்றங்களே என்றும் உறுதியாகக் கூறினார்கள். இது, தமிழ்ப் பகுதிகளின் சமுதாயக் கட்டமைப்பை மாற்றியமைத்ததோடு, தமிழ் பேசும் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வையே படுகேடாகப் பாதித்திருந்தது. இந்தக் கொடூரமான இனவாதக் கொள்கையால் ஆயிரமாயிரம் தமிழர்களும் முஸ்லிம்களும் தமது பாரம்பரிய வாழ்விடத்திலிருந்து விரட்டப்பட்டார்கள் என்றும் புலி அணி வாதிட்டது. இது தொடர்பாகக் காரமான விவாதம் நீண்ட நேரம் இடம்பெற்றது. இறுதியில் இந்தப் பிரச்சினையை அரசுத் தலைவரிடம் விடுவது என்று இணங்கப்பட்டது.

முந்திய சந்திப்புகளின்போது, புலிகள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக 1989 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி ஹமீது புலி அணியைச் சந்தித்தார். நாட்டில் இருந்து இந்தியப் படைகளை அகற்றும் விடயத்தில் அரசுத் தலைவர் உறுதியாக இருக்கிறார் என்று ஹமீது உறுதிப்படுத்தினார். நடைபெற்றுக்கொண்டிருக்கும் குடியேற்றத் திட்டங்களை நிறுத்துவதற்கு முன், குறித்த சில குடியேற்றத் திட்டங்கள் பற்றிய விவரங்களைப் படிக்க அரசுத் தலைவர் விரும்புகிறார் என ஹமீது கூறினார். இனி, விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரச படைகளுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த அரசுத் தலைவர் விரும்புகிறார் என்றும் ஹமீது தெரிவித்தார். போர்நிறுத்த விடயம் தொடர்பாகத் தாம் பிரபாகரனுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று புலி அணியினர் தெரிவித்தனர். பேச்சு தொடங்கியதில் இருந்தே பிரகடனப்படுத்தாத போர்நிறுத்தம் நிலவுவதை அவர்கள் குறிப்பிட்டார்கள். நாட்டை விட்டு இந்திய அமைதிப் படை வெளியேறிய பின்னர், விடுதலைப் புலிகள் நாட்டு அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று அரசுத் தலைவர் வெகுவாக விரும்புகிறார் என ஹமீது கூறினார். விடுதலைப் புலிகள் தேர்தலில் நிற்கத் தயாரென்றால், வடக்குக் கிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட அரசுத் தலைவர் தயாராக இருக்கிறார் என அவர் தெரிவித்தார். இது தொடர்பாக, வன்னியில் உள்ள தலைமையுடன் தாம் கலந்தாலோசிக்க வேண்டும் என்று புலி அணியினர் கூறினர்.

முதற்சுற்றுப் பேச்சுகளின் இறுதி அமர்வு 1989 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி நடைபெற்றது. பேச்சு முன்னேற்றங்களை அளவிடும் இறுதிக் கூட்டமாக அது அமைந்தது. அதுவரை இடம்பெற்ற அமர்வுகள், சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றி, பெருமளவு புரிந்து கொள்ளவும், தெளிவுபடவும் வழிகோலின எனவும், எதிர்காலப் பேச்சுக்கு ஓர் உதவியான அடித்தளத்தை நிறுவியிருக்கின்றன எனவும் இரண்டு பிரிவினரும் ஏற்றுக்கொண்டனர். அடிப்படைச் சிக்கல் இனப் பிரச்சினையே என்பதையும் இரு அணியினரும் ஏற்றுக்கொண்டனர். அத்தோடு, இந்தப் பிரச்சினை சகிப்புத் தன்மையோடும், புரிந்துணர்வோடும் நேரடிப் பேச்சு மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் ஒப்புக்கொண்டனர்.

## காட்டில் பிரபாகரனுடன் சந்திப்பு

பாலா, நான், யோகி, மூர்த்தி, ஜூட் ஆகியோரும் எமது மெய்ப்பாதுகாவலர்களும் 1989 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பிரபாகரனுடன் கலந்தாலோசனை புரிவதற்காக இலங்கை விமானப் படை ஹெலி ஒன்றில் வன்னிக்கு அழைத்துச்செல்லப்பட்டோம். எம்மைப் பொறுத்தவரையிலே பிரபாகரனையும், எமது போராளித் தோழர்களையும் சந்தித்து எமது பழைய நட்பைப் புதுப்பித்து 1987 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையே போர் மூண்ட பின், நாம் அனைவரும் பெற்ற அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளவேண்டும் என்ற வேணவாவும் எமக்கு இருந்தது.

பிரபாகரனுடைய தலைமைப் பணிமனையான 1:4 தளம் என்ற பாசறையை நோக்கி நாம் சென்றுகொண்டிருந்தோம். இந்தப் பிரதேசத்தில் உள்ள பாசறைகள் மீது இந்தியர் தொடரான தாக்குதல் நடவடிக்கையை நடத்தியிருந்தார்கள். யாழ்ப்பாண தீபகற்பத்தில் 'பவான் நடவடிக்கை' காலத்தில், விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க முயன்று தோற்றபின், இந்தியப் படை, வன்னிக் காடுகளில் உள்ள விடுதலைப் புலித் தளங்களை நோக்கித் திரும்பிக் குரூரம் பரவிய, இரத்தச் சகதி நிறைந்த களமாக உருமாற்றியிருந்தது. பெரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விடுதலைப் புலிப் போராளிகளையும் அவர்களுடைய தலைமையையும் வெளியே இழுத்து அழித்தொழிக்கும் நோக்கம் ஒன்றே அவர்களிடம் இருந்தது. இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த ஆயிரமாயிரம் புதிய இந்தியப் படையினர் ஈடுபடுத்தப்பட்டார்கள். கிளர்ச்சி முறியடிக்கும் வல்லுநர்கள் அடங்கிய சிறப்பு அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். படையினரின் நகர்வுக்கும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கனரக கவச வாகனங்களும் ஏவுகணை பொருந்திய ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்பட்டன. ஆயிரமாயிரம் இந்தியப் படைகள் கிழக்குக் கரையான முல்லைத்தீவில் இருந்து ஒட்டுசுட்டான் வரை பரவி நிலைகொண்டார்கள். வடகிழக்கில் உள்ள கிளிநொச்சி வரை இந்தப் படைக்குவிப்பு நடந்தது. சுற்றிவளைப்பும், தேடலும் அளவுக்கு அதிகமாக நடைபெற்றன. இந்த நடவடிக்கைகளில் பெருந்தொகைப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால், இந்தியப் படைகளால் குறிவைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அடர்ந்த காடுகளில் பாதுகாப்பாகத் தங்கள் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

விடுதலைப் புலிகளை நிலைகுலையச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆரம்ப முயற்சிகள் தோல்வி கண்டன. எனவே, வேறு புதிய தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய இராணுவத் தலைமை திட்டமிட்டது. 'செக்மேற்' என்ற குறிப்பெயரோடு 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து அடுத்தடுத்து நடவடிக்கைகளை இந்திய இராணுவம் நடத்தியது. இதில், அலம்பில் காடுகளில் உள்ள புலிகளின் பாசறைகளை இந்திய இராணுவம் தனியாக குறிவைத்துத் தாக்கியது. விமானத் தாக்குதலும் பீரங்கித் தாக்குதலும் அடுதொடராக அந்தப் பகுதியை அதிர வைத்தன. பலம் வாய்ந்த குண்டுகளும், பீரங்கி எறிகணைகளும் ஆயிரமாயிரம் தொன்கள் அளவில் இரவு பகலாகப் புலிகளின் நிலைகள் மீது மழையெனச் சொரிந்தன. ஆயினும், இந்த அதிதீவிர முயற்சி தோல்வியிலேயே முடிந்தது.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





நாகரீகத்தின் உச்சத்தில் மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர் எனக் கருதப்படும் இக்கால கட்டத்தில் இப்படியொரு பயங்கரமும் நடைபெறுகின்றதா? என்று சிந்திக்கும் அளவு மியன்மார் - பர்மா முஸ்லிம் களுக்கு எதிரான தாக்குதல்கள் உச்சத்தை அடைந்திருக்கின்றன.

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள், கலவரங்கள் காரணமாக ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். பலர் நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு கடல் வழியாகத் தப்பி ஓடுகின்றார்கள்.

பௌத்த மதத்தை ஆட்சி மதமாகக் கொண்டுள்ள மியன்மார் உலக நாடுகளினால் இரும்புத் திரை நாடு என்று அழைக்கப்படுகின்றது.பர்மா என்ற பெயரில் அழைக்கப்பட்ட நாடு 1989ம் ஆண்டு மியன்மார் (அல்லது Union of Myanmar) என்று மாற்றியமைக்கப்பட்டது.

# மியன்மாரில் ஈவிரக்கமின்றி ரோஹிங்யா முஸ்லிம்கள் இனப்படுகொலை!



## மௌனம் கலைக்காத முஸ்லிம் நாடுகள்

சுமார் 130 இனங்கள் வாழுகின்ற மியன்மாரில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளும் வட்டார வழக்குகளும் காணப்படுகின்றன.பல்லாயிரக்கணக்கான பௌத்த விகாரைகள் நாடு முழுவதும் பரவியிருப்பதால், இது "Land of Pagodas" என்றும் அழைக்கப்படுகின்றது. சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஆங் சாங் சூகி மியன்மார் இராணுவத்திற்கு எதிராக போராடி, ஜனநாயகத்தை வெளிப்படுத்த பாடுபட்டார்.

இதனை எதிர்த்து இராணுவம் மேற்கொண்ட செயற்பாடுகளை விவரிக்கும் விதமாகவே இரும்புத் திரை நாடு என்று மியன்மார் அழைக்கப்படுகின்றது.

### முஸ்லிம்களுக்கு எதிரான மியன்மார் அரசு

15 ஆம் நூற்றாண்டுகளில் இருந்தே மியன்மாரில் வாழ்ந்து வரும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த தர்மத்தை ஆட்சி மதமாக வைத்துள்ள மியன்மார் மேற்கொள்ளும் தாக்குதல்கள் யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாகும்.

மதக் கலவரங்கள், தனி மனித தாக்குதல்கள், வர்த்தக நிலையங்களுக்கு எதிரான தாக்குதல்கள், திட்டமிட்ட படுகொலைகள் என்று முஸ்லிம்களுக்கு எதிராக மியன்மாரில் நடைபெறும் தாக்குதல்கள் முடிவில்லாதவையாகும். உண்ண உணவின்றி, குடிப்பதற்கு நீராகாரமின்றி, தங்க இடமின்றி கடந்த பல வருடங்களாகவே மியன்மாரின் ரோஹிங்யா முஸ்லிம்கள் பலவிதமான அவதிக்கும் உள்ளாகி வருகின்றார்கள்.

2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அரசுத் தலைவர் தெய்ன் செய்ன் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக வெளியிட்ட முஸ்லிம்களை மூன்றாம் நாடொன்றுக்கு அனுப்பும் திட்டம் காரணமாக அங்கு முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் இன்னும் வீரியமடையத் தொடங்கின.

அரசுத் தலைவர் அறிவித்த சர்ச்சைக்குரிய திட்டத்தை ஆதரித்து மியன்மாரின் சர்ச்சைக்குரிய 969 இயக்கத்தின் தலைவரும், பௌத்த மத குருவுமான அசின் விராது தலைமையில் நடத்தப்பட்ட பேரணியைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் சுமார் 43 பேர் கொலை செய்யப்பட்டார்கள்.




### அஸின் விராதுவின் 969

969 இயக்கம் (969 Movement) என்பது பௌத்தர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மியன்மாரில் இஸ்லாமிய பரம்பலை எதிர்க்க உருவாக்கப்பட்ட ஒரு தேசியவாத அமைப்பாகும்.மியன்மாரின் சர்ச்சைக்குரிய பௌத்த மதகுரு அஸின் விராது தேரர் இதன் தலைவராக இருந்து செயற்படுகிறார்.

இவ்வியக்கம் சர்வதேச மட்டத்தில் பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. பன்னாட்டு ஊடகங்கள் இதன் தலைவர் அஸின் விராது தொடர்பில் பலத்த விமர்சனத்தை முன்வைத்தன.

அமெரிக்காவின் ரைம்ஸ் பத்திரிகை "பௌத்த பயங்கரவாதத்தின் முகம்" என்று இவரை விமர்சனம் செய்திருந்தது.

மியன்மாரில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் சூத்திரதாரியாக இருப்பது இவரும், இவருடைய 969 இயக்கமும் தான். மியன்மாரின் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளை இவரே வழிநடத்தி வருகிறார்.இவருடைய தூண்டுதலில் ஈவிரக்கமின்றி பெண்களும் குழந்தைகளும் கூட கொன்று குவிக்கப்படுகின்றனர்.

### பர்மாவின் பின்லேடன் அஸின் விராது தேரர்

முஸ்லிம்களுக்கு எதிராக 969 அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் வன்முறைகளால் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இதுவரையில் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பை வழிநடத்தும் அஸின் விராது தேரரை பர்மாவின் பின்லேடன் என சர்வதேச ஊடகங்கள் வர்ணிக்கின்றன.இன்றைய நிலையில், உலகில் பௌத்த தீவிரவாதத்தின் ஆணிவேராகக் கணிக்கப்படுபவரே அஸின் விராது தேரர்.

அகிம்சையையும், தர்மத்தையும் போதிப்பதாக கூறப்படும் பௌத்த மதத்தில் இத்தகையதொரு கடும் போக்குவாத அமைப்பு உருவாக்கப்பட்டு வழி நடத்தப்படுவது எவ்விதத்தில் சரியானதாக இருக்க முடியும்?

### யார் இந்த ரோஹிங்யா முஸ்லிம்களா?

மியன்மார் அரசு மற்றும் அசின் விராது தலைமையிலான 969 இயக்கத்தால் தினமும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் ரோஹிங்யா முஸ்லிம்களின் வரலாறு தெளிவானது. 15 ஆம் நூற்றாண்டு முதல் ரோஹிங்யா முஸ்லிம்கள் மியன்மார் - பர்மாவில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இன்றும் காணக் கிடைக்கின்றன.

(13 ஆம் பக்கம் பார்க்க...)



(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)



அண்மைக்காலமாக ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் கடல் வழியாகவும் தரை வழியாகவும் தினம் மியன்மாரில் இருந்து வெளியேறிக்கொண்டே இருக்கின்றார்கள். இவ்வாறு வெளியேறி அண்டை நாடுகளுக்குச் செல்வது அவர்களுக்கு ஓர் ஆபத்தான பயணமாக இருந்தாலும் மியன்மாரில் தங்கியிருப்பதை விட வெளியேறுவதே மேலானதாக இருக்கின்றது.

அந்த வகையில் மியன் மாரில் இருந்து தப்பிச்செல்லல் என்பது அவர்களுக்கான வாய்ப்பு அல்ல உயிர் பிழைப்பதற்கான ஒரே வழி அதுவாகும்.

இவ்வாறு இடம்பெயரும் மக்கள் பெரும்பாலும் பங்களாதேஷுக்கே செல்கின்றனர். பங்களாதேஷுக்கும் மியன்மாருக்கும் இடையில் காணப் படும் ஆற்றைக் கடப்பதே இவர்களின் வாழ்வைப் பெறுவதற்கான முதல் வெற்றி. எல்லைப் பாதுகாப்புப்படை, இயற்கை அனர்த்தம் போன்ற எல்லா விடயங்களிலும் இருந்தும் தப்பிச்செல்வது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல. பெரும்பாலும் சிறிய படகுகளிலேயே பெரிய ஆற்றைக் கடக்க வேண்டிய நிலைமை. கப்பல் கரை தட்டினால் வாழ்வு கப்பல் கவிழ்ந்தால் கரை சேரும் உடல்கள் மட்டுமே கணக்கிடப்படும் பரிதாப நிலை.

ஐ.நாவின் அறிக்கையின் படி ஏறத்தாழ 36 ஆயிரம் முஸ்லிம்கள் பங்களாதேஷுக்கே இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயரும் மக்களுக்கு அங்கு வாழும் மக்களே எதிரியாக மாறக்கூடிய சந்தர்ப்பங்களும் அதிகமாகவே காணப்படுகின்றன. ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளுடன வாழும் பங்களாதேஷ் மக்களுக்கு இதுவும் ஒரு பிரச்சினையாக உருவெடுக்கக்கூடும்.

ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்களாதேஷில் தஞ்சம் புகுவது அவர்களுக்கான முடிவு அல்ல இருந்த போதும் இவர்களுக்கு ஆதரவாக உலக நாடுகளில் மட்டுமல்ல இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிழக்கிலும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# நெஞ்சைப் பிழியும் மியன்மார் படுகொலைகள்

பெளத்த பேரினவாத கடும்போக்காளர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகி உள்நாட்டில் வாழ முடியாத நிலையை எட்டியுள்ள இந்த ரோஹிங்யா முஸ்லிம்கள் நாட்டை விட்டும் வெளியேற முடிவெடுத்து கடல் வழி பயணத்தில் வேறு நாடுகளை அடைய முற்பட்ட வேளை ஆயிரக்கணக்கானவர்கள் கடலில் வீழ்ந்து மரணித்து விட்டார்கள்.

### மௌனம் கலைக்காத முஸ்லிம் நாடுகள்

உயிர் பிழைப்பதற்காக உயிர்ப் பிச்சைக் கேட்கும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு அண்டை நாடுகளான பங்களாதேஷ், இந்தோனேஷியா, மலேசியா போன்ற முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் கூட அடைக்கலம் கொடுக்கத் தயங்குகின்றன. சிலருக்காக கதவைத் திறந்தால் பலருக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டி வருமோ என்ற பயத்தின் காரணமாக இந்நாடுகள் மௌனம் காத்து வருகின்றன.

தாய்லாந்தைப் பொறுத்த வரையில் அதுவும் பௌத்தத்தை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு என்பதனால் மியன்மாரை பகைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதே நிதர்சனமாகும். மலேசியா முஸ்லிம் நாடு. அதுவும் செல்வந்த நாடாக இருப்பது தான் அவர்களுக்குரிய பெரும் பிரச்சினையாகும்.

### ரோஹிங்யா முஸ்லிம்கள் தாழ்த்தப்பட்டவர்களா?

ரோஹிங்யா அகதிகளை தமது நாட்டுக்குள் அனுமதித்தால் உள்நாட்டு மக்களின் வேலைவாய்ப்புக்கு சிக்கலாகி விடும் என்ற காரணத்தால் மலேசியாவுக்குள் ரோஹிங்யா அகதிகள் உள்வாங்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றார்கள். அத்துடன் அனைத்து மக்களையும் ஏற்றத் தாழ்வின்றி பார்க்கும் இஸ்லாத்தை மதமாக கொண்ட மலேசியா முஸ்லிம்கள். ரோஹிங்யா முஸ்லிம்களை தாழ்த்தப்பட்டவர்களாக நினைப்பதும் இன்னொரு காரணமாகச் சொல்லப்படுகின்றது.

ஸக்காத், ஸதகா போன்ற ஏழைகளுக்கு வழங்க வேண்டிய உதவித் தொகை தொடர்பாக வலியுறுத்தப்பட்ட இஸ்லாமிய மார்க்கத்தை பின்பற்றும் மலேசிய மக்களின் இது போன்ற செயற்பாடுகள் இஸ்லாத்தின் பார்வையில் மிகவும் கண்டிக்கத் தக்கவையாகும்.



பங்களாதேஷ் அரசும் ரோஹிங்யா முஸ்லிம்களை தமது நாட்டில் இணைத்துக் கொள்வதற்கு விரும்பவில்லை. நாட்டின் சனத்தொகை பெருக்கமாக இருக்கின்ற காரணத்தால் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு பங்களாதேஷில் இடமளித்தால் பெரும் பிரச்சினைகள் தோன்றலாம் என்று கருதி அவர்களை ஏற்றுக் கொள்வதை பங்களாதேஷ் அரசும் தவிர்த்து வருகின்றது.

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் ரோஹிங்யா முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்ல வேண்டும் என்று மனித உரிமைகள் அமைப்புகள் தொடர்ந்து கோரிக்கைகளை விடுத்து வந்தாலும் ஆசியான் இது தொடர்பில் மௌனமாகவே இருந்து வருகின்றது. ரோஹிங்யா முஸ்லிம் அகதிகளைக் காப்பாற்றுவதை விட மியன்மாருடனான உறவைப் பேணுவதே ஆசியான் அமைப்பின் முக்கிய பணியாக அது நினைக்கின்றது.



### சர்வதேச சமுத்திரவியல் சட்டம்

சர்வதேச சமுத்திரவியல் சட்டத்தின் பிரகாரம் கடலில் நிர்க்கதியான நிலையில் இருப்போரை மீண்டும் கடலுக்குள் துரத்தியடிப்பது என்பது சட்டவிரோதமான செயலாகும். சர்வதேச சமுத்திரவியல் சட்டத்தின்படி ரோஹிங்யா அகதிகளை காப்பாற்றுவது ஒருபுறமிருக்க, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கே பல காலங்கள் ஆகலாம் என்பதே உண்மையாகும்.

எது எப்படிப் போனாலும் சமுத்திரவியல் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கும் ஆசியான் அமைப்பின் ஒத்துழைப்பு அவசியமானதாகும். சர்வதேச சமுத்திரவியல் சட்டம், அதை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் என அனைத்தையும் ஆராய்ந்து ஆசியான் போன்ற அமைப்புகள் முடிவெடுப்பதற்குள் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டு மரணத்தின் விளிம்பில் இருக்கும் ரோஹிங்யா முஸ்லிம்களின் நிலை என்னாகும்?

இலங்கை இறுதி யுத்தத்தில் தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று தமிழர்களுக்காக குரல் கொடுத்தவர்கள் தற்போது உயிருக்குப் போராடி வரும் மியன்மார் முஸ்லிம்களுக்காகவும் குரல் கொடுப்பார்களா?

### மியன்மார் முஸ்லிம்களின் வரலாறு

15 ஆம் நூற்றாண்டு - மியன்மாரில் இஸ்லாமிய எழுத்தோலைகள், நாணயங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

1799 - மியன்மார் - பர்மா தொடரில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் ரோஹிங்யா எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

1871 - மியன்மார் - பர்மாவின் ராகின் மாநிலத்தில் 58 ஆயிரம் முஸ்லிம்கள் வாழ்ந்தனர் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

1911 - மியன்மார் - பர்மாவின் ராகின் மாநிலத்தில் ஒரு லட்சத்து 79 ஆயிரம் முஸ்லிம்கள் வாழ்ந்தனர் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

1977 - மியன்மார் - பர்மாவில் ஏற்பட்ட கலவரம் காரணமாக சுமார் இரண்டு லட்சம் ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்களாதேஷுக்கு இடம் பெயர்ந்தனர். இவர்களில் சுமார் 12 ஆயிரம் பேர் பட்டினியால் பங்களாதேஷில் உயிரிழந்தனர். பின்னர் இவர்களில் மீதமிருந்தவர்கள் மீண்டும் மியன்மாருக்குத் திரும்பி ராகின் மாநிலத்தில் குடியேறினார்கள்.

1982 - ரோஹிங்யா முஸ்லிம்கள் மியன்மார் - பர்மா குடியுரிமையில் இருந்து நீக்கப்பட்டார்கள்.

1989 - பர்மா என்றிருந்த நாட்டின் பெயர் மியன்மார் என்று மாற்றப்பட்டது.



1991 - கலவரம் காரணமாக 2 லட்சத்து 50 ஆயிரம் அதிகமான ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்களாதேஷுக்கு இடம் பெயர்ந்தார்கள்.

1992 - 1993 - இடம் பெயர்ந்தவர்களில் 50 ஆயிரம் ரோஹிங்யா முஸ்லிம்கள் பலவந்தமாக மீண்டும் மியன்மாருக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

2012 ஜனவரி மாதம் - பதிவு செய்யப்பட்ட 29 ஆயிரம் ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்களாதேஷில் வாழ்ந்தார்கள். இவர்கள் 1991ல் பங்களாதேஷில் குடியேறியவர்கள். எனினும் பதிவு செய்யப்படாத இரண்டு லட்சம் ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்களாதேஷில் வாழ்ந்தனர்.

2012 - எட்டு லட்சம் ரோஹிங்யா முஸ்லிம்கள் மியன்மாரில் வாழ்ந்தனர் என தரவுகள் கூறுகின்றன.

2014 - கலவரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

காலைக்கதிர் Kalaikkathir


# அஞ்சா நெஞ்சம் படைத்த வீரப்பெண் லங்கேஷ்!

## பத்திரிகை உலகில் மறக்க முடியாத



யார் இந்த கௌரி லங்கேஷ்? உண்மைகளை எழுதியதால் உயிரை இழந்த பெண் பத்திரிகையாளர்!

'லங்கேஷ்' பத்திரிகை ஆசிரியரும், இலக்கிவாதியுமான கௌரி லங்கேஷ் மர்ம நபர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கௌரிலங்கேஷ்படுகொலையைக் கண்டித்து பெங்களூர் உட்பட பல நகரங்களில் பத்திரிகையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பெங்களூரில் வெளியாகும் லங்கேஷ் பத்திரிகையின் ஆசிரியரும், இலக்கியவாதியுமான கௌரி லங்கேஷ் (55 வயது) பெங்களூரு ராஜ ராஜேஸ்வரி நகரில் வசித்துவந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காரில் வெளியே சென்றுவிட்டு இரவு 8 மணி யளவில் வீட்டுக்கு அருகே சென்று கொண்டிருந்தார். அதன்போது, மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் கைத்துப் பாக்கியால் 7 முறை சுட்டுள்ளனர்.

இதில் நெற்றி, மார்பு உள்ளிட்ட பகுதிகளில் 3 குண்டுகள் பாய்ந்ததில் நிகழ்விடத்திலேயே கௌரி லங்கேஷ் உயிரிழந்தார். தகவலறிந்த ராஜ ராஜேஸ்வரி நகர் போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்த கௌரி லங்கேஷ், மூத்த பத்திரிகையாளர் பி.லங்கேஷின் மகள். இடதுசாரி சிந்தனை கொண்ட இவர், பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகக் கருத்துகளைக் கூறி வந்தார். கர்நாடகத்தில் மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை அமுலாக்க ஆதரவு தெரிவித்தவர்.

1980 ஆம் ஆண்டு ஆங்கில ஊடகத்தில் தனது பணியைத் தொடங்கிய கௌரி, 2000-ஆவது ஆண்டில் தனது தந்தையின் மரணத்துக்குப் பிறகு, பெங்களூரில் தங்கியிருந்து பணியாற்றி வந்தார். மேலும் கௌரி லங்கேஷ் பத்திரிகா என்ற நிறுவனத்தைத் தொடங்கி அதிலும் வெற்றி கண்டார். இந்த நாள் வரை எந்த விளம்பரமும் இல்லாமல் வெறும் வாசகர்களின் கட்டணத்தைக் கொண்டே இந்தப் பத்திரிகை இயங்கி வருகிறது.

**கொலை மிரட்டல்களுக்கு அஞ்சாதவர்**

2000 ஆம் ஆண்டில் கௌரி லங்கேஷ்கரிடம் எடுக்கப்பட்ட நேர்காணலில், கொலை மிரட்டல்கள் குறித்துக் கேட்கப்பட்டது. அப்போது அவர் கூறியவை வருமாறு:-

என்மீது தாக்குதல் நடத்தப்படுவது குறித்து என்றுமே நான் பயம் கொண்டதில்லை. நான் நள்ளிரவுக்குப் பின் 3 மணிக்குக் கூட வீடு திரும்புவேன். ஒரே ஒரு நாள் வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்த போது சேலை கட்டிக்கொண்டு ஓர் ஆண் என்னை நடுரோட்டில் வழிமறித்தார்.

அதைத் தவிர இதுவரை வேறு எந்த அச்சுறுத்தலையும் நான் சந்திக்கவில்லை. ஆனால், அதன் பிறகு, வீடு வரை என் கார் ஓட்டுநரை துணைக்கு அழைத்து வர ஆரம்பித்தேன். இது தவிர சில முறை மிரட்டல் அழைப்புகள் வந்துள்ளன. ஆனால், என்னை மிரட்டுபவர்களிடம், உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிடுவேன். என்னைப் பற்றி மோசமாக எழுத வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளுங்கள். அதற்கும் நான் கவலைப்பட மாட்டேன். - என்றே பதிலளித்துள்ளேன் என்றார்.

**பா.ஜ.கவின் கொள்கைகளுக்கு எதிரானவர்**

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அவர் கூறிய ஒரு கருத்து:

''இந்திய குடிமகனாக பாஜகவின் மதக் கொள்கைகளையும், மத ரீதியிலான அரசியலையும் எதிர்க்கிறேன். இந்து தர்மா என்ற பெயரில் மக்களுக்குச் செய்யும் இடையூறுகளையும், மத நடைமுறைகளையும் கண்டிக்கிறேன். இந்து தர்மம் என்ற பெயரில், நியாயமற்ற, நீதியற்ற, பாலின பாகுபாடு நிறைந்த கொள்கைகளைக் கடுமையாக எதிர்க்கிறேன்'' என்று தெரிவித்தார்.

டாக்டர் அம்பேத்கரால் இயற்றப்பட்ட அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டுள்ள இந்தியாவில் பிறந்த நான், அம்பேத்கரைப் போலவே மத பாகுபாடுக்கு எதிராகப் போராடுவேன். ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம், விமர்சிக்கும் சுதந்திரத்தை நான் முழுமையாக நம்புகிறேன். பா.ஜ.கவுக்கு எதிரானவர், மோடிக்கு எதிரானவர் என என்னை மக்கள் அழைப்பதையும் வரவேற்கிறேன். ஏன் என்றால், என்னுடைய கருத்துக்களைக் கூற எனக்கு சுதந்திரம் இருப்பதுபோல, மற்றவர்களுக்கும் என்னைப் பற்றி கருத்துக் கூற சுதந்திரம் இருக்கிறது என்று நினைக்கிறேன் என்று கூறியுள்ளார்.



தலித் மற்றும் ஏழைகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர்.

நக்ஸலைட்டுகள் மனம் திருந்தி, மீண்டும் எளிய வாழ்க்கையை வாழ பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கௌரி லங்கேஷின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு இங்கே...

★ கௌரி லங்கேஷின் தந்தை பி.லங்கேஷ், கர்நாடகாவில் பிரபலமான பத்திரிகையாளர், கவிஞர், திரைப்பட இயக்குநர். 'லங்கேஷ் பத்ரிகே' என்ற பிரபல கன்னட தினசரியை நடத்திவந்தார். இது, விளம்பரங்களே இல்லாமல், முழுக்க முழுக்க வாசகர்களை நம்பி நடத்தப்பட்ட பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

**வீட்டு வாசலில் சுட்டுப் படுகொலையுண்ட இவரின் மரணத்துக்கு பதில் தருமா மோடி அரசு?**




★ 1962 ஆம் ஆண்டு பிறந்தவர் கௌரி லங்கேஷ். இவருக்குக் கவிதா லங்கேஷ் என்ற சகோதரியும், இந்திரஜித் லங்கேஷ் என்ற சகோதரரும் உள்ளனர். இருவருமே திரைப்பட இயக்குநர்கள்.

(18 ஆம் பக்கம் பார்க்க..)

# கௌரி லங்கேஷ் ஓர் அற்புதமான மனிதி நெகிழ்கின்றார் முன்னாள் கணவர்!



பெங்களூரைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் கொல்லப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல தரப்பினரும் நீதி கேட்டு குரல் கொடுத்து வருகின்றனர். இந்த நேரத்தில் கௌரி லங்கேஷின் முன்னாள் கணவர் சிதானந்த் ராஜ்காட்டா, தனது முகநூல் பக்கத்தில் கௌரி லங்கேஷ் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்துள்ளார். அந்த உருக்கமான நினைவு வரிகள்...

கௌரி லங்கேஷ் தனது மரணத்தைப் பற்றி வெளிவரும் இரங்கல் செய்திகளைக் கேட்க நேர்ந்தால் - குறிப்பாக, ஆன்மா, சொர்க்கம் போன்ற வார்த்தைகளைக் கேட்க நேர்ந்தால் - வாய்விட்டுச் சிரித்திருப்பார். இல்லாவிட்டாலும் சிரிக்காவிட்டாலும், புன்சிரிப்பையாவது அளித்திருப்பார். ஏற்கெனவே, இந்தப் பூமியில் நிறைய சொர்க்கமும் நரகமும் இருக்கின்றன.

நாம் கடவுளைத் தனியாக விட்டு விடுவோம். மற்றவர்கள்போல அவரிடம் இது வேண்டும் அது வேண்டும் எனக் கேட்க வேண்டாம் என, எங்களின் இளம்பருவத்தில் நாங்கள் முடிவுசெய்துவிட்டோம்.

கௌரி லங்கேஷும் நானும் ஐந்து வருடங்கள் காதலித்து, ஐந்து வருடங்கள் திருமண வாழ்க்கையைக் கழித்து, அதன்பிறகு விவாகரத்தாகி 27 வருடங்கள் ஆகின்றன. ஆனால், இருவரும் ஒருவரையொருவர் புண்படுத்திக் கொண்டவர்கள் அல்லர். நண்பர்களாக இருந்தோம்; மிகச் சிறந்த நண்பர்களாக!

இந்தியாவில் பகுத்தறிவு தோன்றிய இடத்தில்தான் நாங்கள் சந்தித்துக்கொண்டோம் - நேஷனல் காலேஜில். நாங்கள் இளம் வயதிலேயே மூடநம்பிக்கைகளை, ஏமாற்றுப் பேர்வழிகளை, சாமியார்களைக் கேள்வி கேட்டோம்; அவர்களைத் தோலுரித்து காட்டினோம். இந்தத் தகவல்களை நான் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. நாத்திகர்களும் மதச்சார்பற்றவர்களும் மதவெறியாளர்களுக்கும் நேரெதிரானவர்கள்.



கல்லூரி படிக்கும்போது என்னுடைய புகைபிடிக்கும் பழக்கத்தை அவர் வெறுத்தார். நான் புகைபிடிப்பதை விட்டிருந்த சமயத்தில், அவர் புகைபிடிக்க ஆரம்பித்தார். ஒருமுறை, என்னைப் பார்க்க அமெரிக்காவுக்கு வந்தார். (என் முன்னாள் மனைவி என்னைப் பார்க்கவருகின்றமை வேடிக்கையாக இருக்கிறதல்லவா? ஆனால், அவர் என் முன்னாள் மனைவி என் பதைவிட என் தோழி!). எங்கள் வீட்டில் கார்பெட் தரை போடப்பட்டிருந்ததால், அவரைப் புகைபிடிக்க வேண்டாம் என்று கூறினேன். அது குளிர்காலம் வேறு. எங்களுடைய உரையாடல் இப்படி இருந்தது.

*''என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?''*

*''உனக்குப் புகைக்க வேண்டுமானால், மொட்டைமாடிக்குச் சென்று புகைக்கலாம்''*

*''அங்கு மிகவும் குளிராகவும் பனி கொட்டிக்கொண்டும் இருக்கிறது''*

*''அலட்சியம்''*

*''உன்னால்தான் நான் புகைக்கத் தொடங்கினேன்''*

*''மன்னிக்கவும். நான் உன்னைப் புகைப்பதை நிறுத்தக் கேட்கிறேன்''*

*''ஆமாம்! நீ அமெரிக்கனாகவே ஆகிவிட்டாய்''*

*''இதற்கு அமெரிக்கனாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆரோக்கியமாக இரு''*

*''நான் உன்னைவிட நீண்ட காலம் வாழ்வேன்''*

*''பொய் சொல்லியிருக்கிறாய் கௌரி''.*

எங்களுடைய நட்பைக் கண்டு பலரும் குழம்பியிருக்கிறார்கள். இந்தியாவில் பிரிவதும் விவாகரத்து பெறுவதும் கசப்பான, சோகமான முடிவாகக் கருதுகிறார்கள். எங்களுக்கும் இனிமையான காலங்கள் இருந்தன.

ஆனால், எங்களுக்கு உயர்ந்த இலட்சியங்கள் இருந்தமையால், விலகவேண்டியிருந்தது. நீதிமன்றத்தில் நாங்கள் அருகருகே நின்றுகொண்டிருந்தோம், எங்கள் கைகளைக் கோர்த்த வண்ணம் நின்றோம். 'உங்களுக்கு விவாகரத்து வேண்டுமானால், இருவரும் தனித்தனியாக நில்லுங்கள்' என்று எங்கள் வழக்கறிஞர் மெதுவாகக் கூறினார்.

விவாகரத்து பெற்றபின்னர், நாங்கள் ஒன்றாக 'ரெஸ்டாரன்ட்' சென்று சாப்பிட்டோம். இருவரும் சிரித்தபடி விடைபெற்றோம். நான் டெல்லிக்குச் சென்றேன், பிறகு மும்பை. அதன்பிறகு வொஷிங்டன். அவர் என்னை ஒவ்வோர் இடத்திலும் வந்து சந்தித்தார். நான் எட்டு வருடங்களுக்கு முன்னால், பெங்களூரில் வசித்தேன். அப்போது அவர், உனக்கு வீட்டு வேலை செய்ய நிச்சயம் ஒருவர் வேண்டும். நான் ஒருவரை அனுப்புகிறேன். அவர் கணவரை இழந்தவர். அவருக்கு இரண்டுப் பெண் குழந்தைகள். அவர்களின் படிப்புச் செலவை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்.- என்றார்.

*கௌரி லங்கேஷ் தனது மரணத்தைப் பற்றி வெளிவரும் இரங்கல் செய்திகளைக் கேட்க நேர்ந்தால் - குறிப்பாக, ஆன்மா, சொர்க்கம் போன்ற வார்த்தைகளைக் கேட்க நேர்ந்தால் - வாய்விட்டுச் சிரித்திருப்பார். இல்லா விட்டாலும் சிரிக்காவிட்டாலும், புன்சிரிப் பையாவது அளித் திருப்பார். ஏற்கெனவே, இந்தப் பூமியில் நிறைய சொர்க்கமும் நரகமும் இருக்கின்றன.*

இப்போதும் அவர் அனுப்பி வைத்த ராமக்கா எங்களுடன் இருக்கிறார். அவரின் குழந்தைகள் படித்து முடித்து, வேலைக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். இப்படி நூறு பேரை உருவாக்கியவர் கௌரி லங்கேஷ். இதை எழுதிக்கொண்டிருக்கும்போதே, என் மனம் முழுவதும் அவருடன் பயணித்த நினைவுகளால் நிரம்பி வழிகிறது.

இடதுசாரி, இந்துத்துவ எதிர்ப்பாளர், மதச்சார்பற்றவர் இதுபோன்ற பட்டங்களை எல்லாம் மறந்துவிடுங்கள். அவரை நினைக்கும்போது இந்த வரிகள் மட்டுமே மீண்டும் மீண்டும் என் மனத்துக்குள் ஓடிக்கொண்டிருக்கின்றன... ★



## அணு ஆயுதத்தில் வெல்ல முடியாது

அணு ஆயுதப் போர் நிகழ்ந்தால் அனைவரும் அழிவது உறுதி. எந்த ஒரு பிரச்சினைக்கும் பேச்சு வார்த்தை என்ற கதவு எப்போதும் திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை உலகத் தலைவர்கள் உணர்வதற்கு மக்கள் தொடர்ந்து செபிக்க வேண்டும் என தென்கொரிய ஆயர் பேரவையின் நீதி அமைதிப் பணிக்குழுவின் தலைவர் வேண்டியுள்ளார்.

காலைக்கதிர்

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## துன்புறும் மக்களில் இயேசு பிரசன்னம்

துன்புறும் மக்களில் இயேசு பிரசன்னமாயிருக்கிறார். இயேசுவைப்போல் துன்பங்களை அனுபவிக்கும் எண்ணற்ற நம் சகோதர சகோதரிகளில் இயேசு பிரசன்னமாக இருக்கிறார்; நாம் கடவுளை எவ்வளவு தூரம் அன்புகூருகிறோம் என்பதைவிட அவர் நம்மை எவ்வளவு தூரம் அன்புகூருகிறார் என்பதை அறிந்து கொள்வது மிக முக்கியம் எனத் திருத்தந்தை பிரான்ஸிஸ் தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ளார்.

# மட்டு. ஆயித்தியமலை சதாசகாய அன்னையின் திருத்தல திருவிழாவில் யாழ். ஆயர்





மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற திருத்தலமான ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னையின் திருத்தல வருடாந்தத் திருவிழாத் திருப்பலியை யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி பொன்னையா ஜோசப் ஆண்டகை இணைந்து ஒப்புக் கொடுத்தார். பங்குத்தந்தை சுலக்சன் அடிகளார் தலைமையில் 25 ஒகஸ்ட் 2017 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மேற்படி பெருவிழா 3 செப்ரெம்பர் 2017 அன்று யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புகொடுக்கப்பட்ட திருவிழா திருப்பலியுடன் நிறைவு கண்டது. ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னையின் திருத்தல திருவிழா திருப்பலியில் மறைமாவட்ட அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலிருந்து வருகை தந்த 10 ஆயிரம் மக்கள் கலந்துகொண்டு திருவிழா திருப்பலியைச் சிறப்பித்தனர்.

## உண்மையின் எண்ணங்கள்

### புலம்பெயர்ந்த மக்கள் மத வேறுபாடுகளை மறந்து அன்போடும் மகிழ்வோடும்!

ஜேர்மன் கேவலார் புலம்பெயர்; தமிழர்களின் திருயாத்திரையில் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்துகொண்ட பின்னர் நெதர்லாந்து புனித சிறிய லூர்து அன்னை ஆலய பத்தாவது ஆண்டு நிறைவு வழிபாடுகளில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் கலந்துகொண்டுள்ளார். புலம்பெயர் தமிழர்களின் திருயாத்திரைகள் அந்தந்த நாட்டு ஊடகங்களில் சிறப்பு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றமை இங்கு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டும். ஐரோப்பாவில் சிதறி வாழும் தமிழர்கள் சந்தித்து வழிபடவும் உறவாடவும் தமக்குத் தேவையான தாயகப் பொருள்களை வாங்கிக் கொள்ளவும் இந்த யாத்திரைகள் துணைபுரிகின்றன. தமிழர்களின் திருயாத்திரையில் இளையோர்கள் அதிகம் பங்கேற்பது சிறப்பம்சமாகும்.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் கிறிஸ்தவ மக்களும் இந்து மக்கள் மதவேறுபாடுகளை மறந்து அன்போடும் மகிழ்வோடும் இந்த விழாக்களில் பங்கேற்கின்றமை சிறப்பானது. இலங்கை வாழ் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் சிதறி வாழ்ந்தாலும் தாம் வாழும் நாடுகளில் தமது ஆழமான விசுவாசத்தையும் பாரம்பரியங்களையும் விட்டு விடாது தொடர்ந் தும் தாய்மொழியில் இறைவழிபாடுகளிலும் யாத்திரைகளிலும் உற்சாகமாகப் பங்கேற்று வருவது சிறப்பானது.

# நெதர்லாந்து லூர்துஅன்னை ஆலய பத்தாவது நிறைவில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர்



நெதர்லாந்து புனித சிறிய லூர்து அன்னை ஆலய பத்தாவது ஆண்டு நிறைவு சிறப்பு வழிபாடுகள்யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் 3ஆம் திகதி செப்ரெம்பர்மாதம் 2107 அன்று நடைபெற்றது. அந்த நிகழ்வின் படத்தை 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களுக்காக இங்கு பதிவு செய்கிறோம்.

# கரித்தாஸ் கியூடெக் சர்வமத அரங்கால் நடத்தப்பட்ட ஹஜ் பெருவிழா நிகழ்வு



யாழ். கியூடெக் கரித்தாஸ் நிறுவன சர்வமத அரங்கத்தால் ஹஜ் பெருவிழா முதியோர் சங்கத்துடன் இணைந்து இல. 86 வண்ணார் பண்ணை மதுருசா மண்டப முன்றிலில் 2 செப்ரெம்பர் 2017 அன்று சர்வ மத சிறப்பு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவைக் கிளிமுல்லைமாவட்ட உலாமா சபை முன்னாள் தலைவர் ஏ.ம்.ஏ.அசீஸ் மௌலவி கிராத் ஓதி ஆரம்பித்தார். இந்த விழாவிற்கு குருநாகல் கரித்தாஸ் இயக்குநருடன் சர்வமத குழுவினர் இணைந்து சிறப்பித்தனர்.

இந்த விழாவிற்குப் பிரதம விருந்தினராக கலந்து சிறப்புரையாற்றிய கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்ஸிஸ் அடிகளார் இம்முறை ஹஜ் பெருநாளை நாம் ஒன்று கூடி மகிழும் சூழலில் மியன்மாரில் எமது முஸ்லிம் உறவுகள் பல துன்ப, துயரங்களுக்கு ஆளாகித் துயருறுவது மிகவேதனையைத் தருகின்றது. இதற்குத் தமிழ்ச் சமூகம் தமது கவலையை வெளிப்படுத்தியிருப்பது நல்லுறவுக்கு ஓர் அடையாளமாகும். எங்கு துன்புறும் மக்கள் துயருறுகின்றார்களோ அவர்களின் துயரைக் களைய இறைவனை வேண்டுவதே சர்வமத ஐக்கிய நிலையாகும். இன்று எம்முடன் இந்து, கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய ஒன்றிப்புடன் தமிழ், சிங்கள, முஸ்லிம் உறவுகளும் இந்த விழாவில் கலந்திருப்பது சர்வமத ஒன்றிப்புக்கு நல் எடுத்துக்காட்டாகும் என்றார்.

# திருக்குடும்ப பொதுநிலையினருக்கான ஆசிய மாநாடு



திருக்குடும்ப பொதுநிலையினருக்கான ஆசிய மாநாடு கொழும்பு வென்னப்புவவில் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடைபெற்றது. கடந்த 8 வருடங்களாக யாழ். மாகாணத்தை சேர்ந்த திருமதி றெஜினா இராமலிங்கம் ஆசிய தலைவியாக சிறப்பாகப் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து புதிய ஆசியத் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த இருதயதாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழ் திருக்குடும்ப பொதுநிலையினருக்கான புதிய ஆசியத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த இருதயதாஸின் பணி சிறக்க வாழ்த்துகிறது. யாழ். திருக்குடும்ப கன்னியர் சபையின் வடமாகாண முதல்வர் அருட்சகோதரி லுட்வின் கிறிஸ்ரா புதிய ஆசியத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த இருதயதாஸுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் படம் இங்கு பதிவாகிறது.

# அகவொளியில் உளஆற்றுப்படுத்தல் டிப்ளோமா நெறிக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்பநல மேய்ப்புப்பணி நிலையத்தில் 2017ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆரம்பமாகவுள்ள ஒரு வருட உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகத்தால் சான்றிதழ் வழங்கப்படும் மேற்படி பயிற்சி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 2.00 மணி வரை இடம்பெறும். க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த 25 இற்கும் 40 இற்கும் உட்பட்ட வயதுடையோர்; விண்ணப்பிக்க வேண்டிய இறுதிநாள் புரட்டாதி 15 ஆம் திகதியாகும். முப்பது பேர் மாத்திரம் உள்வாங்கப்படுவார்கள். விசேட விண்ணப்பத்தைப் பொதுவிடுமுறை நாள்கள் தவிர்ந்த நாள்களில் பணியக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார் 0774766891, 0212222856.

# உளர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

## சர்வதேசத்தை நம்புவதை விட மக்கள் அழுத்தமே அவசியம்!



வழக்கம் போல சந்தியடியில் ஜீவன், ரூபன், ஏரம்பர், வாத்தியார், பேப்பர்தம்பி ஆகியோருடன்கச்சான்விற்கும்செல்லாச்சியும் கூடியிருந்தனர்.

வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டிருந்த செல்லாச்சி, ''இலங்கைக்காசுகளிலை பெறுமதியைப் போட்டு'' 'ரூபாய்' என்றுதான் போட்டிருக்கு. பள்ளிக்கூடங்களிலும்பிள்ளைகளுக்கு 'ரூபாய்' என்று எழுதத்தான் பழக்குகினம். பிறகு ஏன்தமிழ்ப் பத்திரிகைகளிலை 'ரூபா' என்று எழுதுகினம்.

காசிலை 'ரூபா' என்று எழுத வேணும்.இல்லாட்டி பத்திரிகைகள் 'ரூபாய்' என்று எழுத வேணும். – என்றாள்.

''நாங்கள் வேணுமென்றால் கதைச்சுப் பேசி, உன்னை ஜனாதிபதிக்கு உதவியாக அனுப்பிவிடுறம். நீ இந்த மாதிரி விசயங்களை மாத்திக் காட்டன்'' என்று நக்கலடித்தான் ஜீவன்.

அதற்குச் செல்லாச்சி ''அதிகாரியாகி சில்லெடுத்த உடுப்புக் குடுக்கிறதிலை காசடிச்சதென்று நானும் சிறைக்குப் போகவோ?'' என்று சிரித்தபடியே கேட்டாள்.

''அது சில்லெடுத்த உடுப்பில்லை செல்லாச்சி; 'சில்' உடுப்பு'' என்று திருத்தினான் பேப்பர்தம்பி.

''அதென்ன 'சில்' உடுப்பு?'' என்று கேட்டார் ஏரம்பர்.

அதற்கு விளக்கமளித்த பேப்பர்தம்பி, ''வடக்குக்கு வருகிற சிங்கள ஆக்கள் நயினாதீவு விகாரைக்குப் போகும் போது வெள்ளை உடுப்புப் போட்டுக் கொண்டு போறதை அவதானிச்சிருப்பீங்கள்.சிங்களத்திலை 'சீலம்' என்றால் விரதம் என்ற அர்த்தம் வரும். போயா தினத்திலை விரதமிருந்து விகாரைக்குப் போகும் போது அணிகின்ற வெள்ளை உடுப்பைத்தான் 'சில்' உடை என்று சொல்லுறவை. எங்கடை அரசியல் வாதிகள் தேர்தல் நேரத்திலை இலவசமாக சட்டி, பானை, பாடசாலைப் பை என்று சனத்துக்குக் கொடுத்துக் கவருகிறவை.அதுமாதிரி தெற்கிலை 'சில்' உடை வழங்குவது வழக்கமாம்.'' – என்றான்.

''அது என்ன உடுப்பாகவும் இருக்கட்டும். ஆனால், ஊரைக் கொளுத்தினராசாவுக்கு கொள்ளி எடுத்துக்கொடுத்ததற்கு நல்ல தண்டனைதான் கிடைச்சிருக்கு'' என்று வன்மத்துடன் சொன்னாள் செல்லாச்சி.

''கடவுளைக்கும்பிடப் போறவைக்கு உடுப்புக் கொடுக்கிற விசயத்திலை பிழை விட்டால் தெய்வக்குற்றமெல்லே'' என்றார் ஏரம்பர்.

''மதங்களிலை பெரிசு, சின்னன் என்று பிரிச்சு வைச்சு நடத்திறவைக்கு இது ஒரு பாடம்'' என்றான் ரூபன்.

''அவையின்றை 'கோட்டும் சூட்டும்' எடுப்பும்....கடைசியிலை உள்ளுக்குள்ளை போகேக்கை எல்லாத்தையும் கழட்டி வெளியிலை கொடுத்துப் போட்டுத்தானே போனவை. அதைத் தொலைக்காட்சிகளிலை காட் டினவை தானே'' என்று புழுக்கத்துடன் சொன்னான் ஜீவன்.

அதுவரை எதுவும் கதைக்காமல் வாத்தியார் இருண்ட முகத்துடன் மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக்கொண்டிருப்பதை அவதானித்த பேப்பர் தம்பி, ''வந்ததிலை இருந்து வாத்தியார் எதுவும் கதைக்காமல் இறுக்கமாகவே இருக்கிறியள். வெளியிலை சொன்னால்தானே வெப்பியாரம் தீரும்'' என்றான்.

இதைக் கேட்ட வாத்தியார் முகத்தைக்கைகளால் அழுத்தித் துடைத்துவிட்டு, மற்றவர்களை ஒருமுறை ஆழமாகப் பார்த்தார். பிறகு வரண்ட குரலிலேயே கதைக்கவும் தொடங்கினார்.

''இரண்டு பேருக்குச் சிறைத் தண்டனை கிடைச்சிருக்கு. அது உங்கள் எல்லோருக்கும் ஏதோ ஒரு விதத்தில் திருப்தியையும் தந்திருக்கு. ஆனால் அந்தத் திருப்திக்கான காரணங்கள் வெவ்வேறு என்பதுதான் உண்மை. செல்லாச்சிக்கு இன அழிப்புக்குத்துணைசெய்தவை என்பதும், ஏரம்பருக்குக் கடவுள் குற்றம் என்பதுவும், ரூபனுக்கு மத வேறுபாடும், ஜீவனுக்கு அவர்களின் மேட்டிமையும் காரணங்களாக இருக்கின்றன. ஆனால், உங்களில் ஒருவர்கூட இந்த நாட்டை வழி நடத்துபவர்களின் தவறான நடத்தைகளால் மற்றைய நாடுகளின் மத்தியில் இந்த நாடு தலை குனிஞ்சு நிற்குதே என்ற கவலை இல்லாமல் போயிருக்கு. இப்படி ஒரு நிலைமை எங்களைத் தங்களுக்கு இசைவாகப் பயன்படுத்த முயற்சிக்கும் அன்னிய சக்திகளுக்கு வசதியாக இருக்கும் என்பது புரியாமல் போய் விட்டது. ஒரு வகையிலை இதைத்தான் அந்த சக்திகள் எதிர்பார்த்திருந்ததும். இதனை மாற்ற எந்த முயற்சியும் எடுக்காமல், 'உன்னாலை நான் கெட்டேன்; என்னாலை நீ கெட்டாய்' என்று நாங்கள் தொடர்ந்து முரண்பட்டுக் கொண்டிருக்கிறம்.'' என்று சொல்லி விட்டு ஆழமாகப் பெருமூச்சு விட்டார்.

இதற்குப்பேப்பர்தம்பி, ''இலங்கையில் இனப் பிரச்சினை என்று சொல்லுகிறோம்.அது உண்மையானால் தமிழனும் சிங்களவனும் இஸ்லாமியனும் மட்டும்தானே பிரிந்து நின்று மோத வேணும். ஆனால் இந்த நாட்டிலைசிங்களவருக்குள்ளையும்தமிழருக்குள்ளையும்இஸ்லாமியருக்குள்ளையும் கன்னை பிரிஞ்சு குத்து வெட்டு நடந்து கொண்டிருக்கு.இந்தக் கன்னைகளின் பின்னால் இருப்பவை அநேகமாக ஒரே அன்னிய சக்திகளாகத்தான் இருக்கும்.ஆனால், வெவ்வேறு பெயர்களில்அவை மூக்கை நுழைப்பதால் நாங்கள் எங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கிறம்.இந்த மோதல் தொடர வேண்டும் என்பதற்காகவே வகைவகையாக எங் களுக்குள்ளேயே வெறுப்புணர்வுகளைத் தூண்டும் வேலையை எங்களைக் கொண்டே வெளிச்சக்திகள் செய்கின்றன என்பதை எப்போது நாங்கள் உணரப் போகின்றோமோ தெரியாது. அப்படி மக்களுக்குப் புரியவைக்கிற மக்கள் தலைவர் எவராவது உருவாகும் நிலைமையும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியவும் இல்லை'' என்று இயலாமையுடன் சொன்னான்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த செல்லாச்சி ''முட்டையிட்ட கோழிக்குத்தானே நோ தெரியும்.அதுமாதிரி இழந்தவைக்குத்தானே வேதனை புரியும்'' என்று குரலை உயர்த்திச் சொல்லி விட்டு, சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்தாள்.

''நடந்ததுகளை மறந்து கூடிக் குலாவச் சொல்லுறீங்களோ. சமூக ஊடகங்களிலை நாங்கள் எவ்வளவு தீவிரமாகப் போராடுகிறம் தெரியுமா?'' என்று சீற்றத்துடன் கேட்ட ஜீவன் கைபேசியில் எதனையோ பதிவிடுவதில் தீவிரமானான்.

''அண்ணை வரட்டுமன். அப்ப காட்டிறம் நாங்கள் யாரென்று'' என்று உற்சாகமாகச் சொன்னான் ரூபன்.

''இவங்கள் எல்லோரும் எங்களைஉடுத்த உடுப்போடை ஓட வைக்கத்தான் திட்டம் போடுறாங்கள். கொஞ்சக் காலம் பொறுங்கோ, அரசாங்கத்தோடை மென்மையாகக் கதைச்சு நல்ல தீர்வை உருவிக் கொண்டு வந்து காட்டிறம்'' என்று நம்பிக்கையுடன் சொன்னார் ஏரம்பர்.

இதற்குச்செல்லாச்சி, ''இவை தங்கத்தாம்பாளத்திலை வைச்சு தீர்வைக்கொண்டு வாரத்துக்குள்ளை நாங்கள் பட்டினி கிடந்து செத்துப் போயிடுவம்.பிறகு இவை தங்கடை பிள்ளை குட்டிகளோடை சுகமாக இருப்பினம்'' என்று கடுமையாகச் சொன்னாள்.

இதற்கு ஏரம்பர், ''அதுதான் நீங்கள் கொண்டு வந்து விட்டிருக்கிறியள். பார்க்கிறம்தானே'' என்று மறுத்தான் அடித்தார்.

இதையெல்லாம் பார்த்த வாத்தியார், தலையைக் குனிந்தார். பேப்பர்தம்பி ''உந்தச் சண்டையை எப்ப விடுறீங்களோ, அப்பதான் எங்களுக்கு விமோசனம்''. – என்றான்.

அப்போது தலை நிமிர்ந்த வாத்தியார் தீர்க்கமான குரலில் கதைக்கத் தொடங்கினார்.

''இந்த நாட்டிலை இனப் பிரச்சினையாலையும், அதனாலை நடந்தயுத்தத்தாலையும் இலங்கையர்கள் எல்லோரும் ஏதாவது ஒரு விதத்திலை பாதிக்கப்பட்டுத்தான் இருக்கிறம்.ஒவ்வொருவருக்கும் அவரவரின் பாதிப்புத்தான் பெரிதாகத் தெரிகிறது. எங்களுக்கு நடந்ததுகளுக்கு நியாயம் கேட்கிறமே தவிர, அடுத்த தலைமுறைக்கு எதனை விட்டுச்செல்லப் போகிறம் என்று யோசிக்க நாங்கள்தயாராகஇல்லை'' என்ற வாத்தியாரை இடைமறித்த பேப்பர்தம்பி ''நாங்கள் தூக்கிப் பிடிச்சிருக்கிற போராட்ட மட்டைகளை எங்கடை கையில் திணித்தது யாரென்று பார்த்தால், எங்களுக்குள்ளை பல்வேறு பெயர்களில் ஊடுருவியிருந்த அன்னிய சக்திகள்தான். ஆனால், நாங்கள் ஏதோ நாங்களாகவே எங் களுக்காகப் போராடுகிறம் என்று நம்பிக்கொண்டிருக்கிறம்'' – என்றான்.

தனது கதையைத் தொடர்ந்த வாத்தியார் ''யுத்தம் நடந்தபோது இரண்டு தரப்புகளில் இருந்தும் 'விடாதயுங்கோ; அடியுங்கோ' என்று வெளியில் இருந்து விசிலடிச்சவைதான் அதிகம்.ஒரு விசயம் கேட்கிறன்.இதாலை நீங்கள் என்னை என்ன செய்தாலும் கவலையில்லை'' என்று பீடிகை போட்டு நிறுத்தினார்.

மற்றவர்கள் அவரையே பார்த்தபடி இருந்தனர். அவர் தொடர்ந்தார்.

''நாட்டிலை எங்காவது ஓரிடத்திலை புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் தொடர்ந்து யுத்தம் நடக்கும். ஊடகங்கள்யுத்தச்செய்திகளை விற்றன.அவற்றை வாங்கிப் பார்த்து உச்சுக் கொட்டி விட்டு அவரவர் தத்தம் வேலையைப் பார்த்தார்கள்.அரசியல்வாதிகள் அறிக்கைகள் விட்டு அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப் பட்டனர். நடுவிலை உதவி செய்யிறம் என்று வந்த நிறுவனங்கள் தங்கடை வேலையிலை தெளிவாக இருந்தன. அவையோடை இணைந்து எங்கடை ஆக்கள் சமாதான சக வாழ்வு பற்றி வகுப்பெடுத்திச்சினம்.ஆனால்...'' என்று சொல்லி நிறுத்தி விட்டு, போத்தல் தண்ணீரைக் குடித்த வாத்தியார் தொடர்ந்தார்.

''ஒரு பக்கம் சண்டை நடந்தாலும் ,ஊரிலை திருவிழா பண்டிகையென்றுஎல்லோரும் கொண்டாடிக் கொண்டு இருக்கும் அதேநேரம், ஆமியிலை இருக்கிற தன் மகனுக்கு எதுவும் நடக்கக்கூடாது என்று தெற்கிலை இருந்து ஒரு சிங்களத் தாயும், விடுதலைப் புலியான தன்மகன் இந்தச் சண்டையிலைசெத்துவிடக்கூடாது என்று வடக்குக் கிழக்கிலை இருந்து ஒரு தமிழ்த் தாயும் வெளியிலை காட்டக்கூட முடியாமல் தத்தமது வீட்டுச் சாமிஅறைகளில் வடித்த கண்ணீரிலை என்ன வேறுபாடு இருந்து விட முடியும்'' என்று கேட்டு விட்டு எல்லோரையும் பார்வையால் துழாவினார்.

செல்லாச்சி நல்ல கச்சான்களுக்கிடையில் இருந்த கருகின கச்சான்களைப் பொறுக்கி எறிந்தபடி தீவிர யோசனையில் இருந்தாள்.மற்றவர்கள் மனதின் குழப்பத்தைக் கண்களில் காட்டினர்.

''இப்ப என்னதான் செய்ய வேணும் என்று சொல்லுறீங்கள்'' என்று ஈனஸ்வரத்தில் கேட்டான் ரூபன்.

''தெரியவில்லை...சத்தியமாகத் தெரியவில்லை.ஆனால் வாக்குப்பொறுக்கிற அரசியல்வாதிகளே பிரச்சினைகளைத் தீர்ப்பினம் என்று நம்புவதோ, அடிக்கடி அவையைச்சந்தித்து புகைப்படத்துக்குப் 'போஸ்' கொடுத்து மூக்குச் சிந்தி விட்டுப் போகும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பது மட்டுமே பிறவிக்கடன் என்று நம்புவதோ, எங்களினது அல்லதுநாட்டினதுஎதிர்காலத்துக்கு எந்த விடிவையும் தரப்போவதில்லை என்பது மட்டும் விளங்குது.'' என்றார் வாத்தியார்.

''அதாவது சர்வதேச அழுத்தத்தை விட, மூவின மக்களும் சேர்ந்து தரும் அழுத்தமே அதிக பயனைத் தரும் என்பதே உண்மை.ஆனால், இதனை எல்லோருக்கும் விளங்க வைக்கும் வேலைத்திட்டத்தை யார், எப்படி முன்னெடுப்பது என்பதுதான் தெரியவில்லை'' என்றான் பேப்பர்தம்பி.

''வெறுமனே அரசியல் வாதிகளைக் கதைக்க விடுவதிலோ, அல்லது வெளிநாட்டு நிதியுதவிகளால் நட்சத்திர விடுதிகளில் நடத்தப்படும் கலந்துரையாடல்களிலோ, சமாதானச் சுற்றுலாக்களிலோ தீர்வைத் தேடாமல், சாமானியர்கள்கலந்து கதைக்கவேண்டும். இதனைஎப்படிச்செய்வது என்றுதான் புரியவில்லை. ஏனென்றால் அப்படி எதுவும் நடந்துவிடாமல் தடுப்பவர்கள் நாங்கள்நம்புகிறவர்களாகவே இருப்பது தான் துரதிஷ்டமாக இருக்கிறது'' என்றபடி எழுந்து நடக்கத் தொடங்கினார் வாத்தியார்.

இருட்டுவது கூடத் தெரியாமல் கோவில் கோபுரத்தை வெறித்துப் பார்த்தபடியே இருந்தாள் செல்லாச்சி.

நிசப்தமானது சந்தியடி.

### 4 ஆம் குறிச்சி, 5 ஆம் குறிச்சி, எல்லை நகர் கிராமங்களை

# ஏறாவூருடன் இணைப்பதற்கு எதிராக செங்கலடியில் நேற்று ஆர்ப்பாட்டம்!










மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பு - ஏறாவூர் நன்காம் குறிச்சி, ஐந்தாம் குறிச்சி மற்றும் எல்லை நகர் கிராமங்களை ஏறாவூர் நகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் இணைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளைக் கண்டித்து செங்கலடியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் ஏறாவூர் நன்காம் குறிச்சி, ஐந்தாம் குறிச்சி மற்றும் எல்லை நகர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது, ''எமது கருத்துக்கு மதிப்பளிக்கவும்'', ''வைத்திய எல்லையை மாற்றாதே'', ''பேச்சிலே இணக்க அரசியல்; செயலிலே பிணக்கு அரசியல்'', ''எங்கள் பகுதியை ஏறாவூர் நகருடன் இணைக்க இடமளியோம்'', போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி இ.சிறிநாத்திடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர். (ச)

# வித்தியா படுகொலைக்கு விரைவில் நீதி கிடைக்கும்!

### மகளிர் விவகார அமைச்சர் அனந்தி நம்பிக்கை



வித்தியா படுகொலைக்கு விரைவில் நீதி கிடைக்கும். இவ்வாறு வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை தொடர்பாக கேள்வி எழுப்பப் பட்டது. அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

வித்தியா படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் நீதிமன்றத்தில் இடம் பெற்றுவருகின்றன. நீதி மன்றத்தின் ஊடாக நீதி கிடைக்கும் என நம்புகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் மகளிர் மற்றும் புனர்வாழ்வு தொடர்பான அலுவலகங்கள் நிறுவப்பட்டு அதன் ஊடாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான ஒரு செயற்பாட்டை அரசு இதுவரை முழுமையாகச் செயற்படுத்தவில்லை.-என்றார். (ச)

# பொலன்னறுவையில் விபத்து: சகோதரர் இருவர் உயிரிழப்பு!

### ஜனாதிபதியின் சகோதரர் சரண்

பொலன்னறுவை, செப்.10

பொலன்னறுவையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் பொலன்னறுவை எதுமல்பிட்டி பகுதியில், வசிக்கும் ஹேரத் (வயது-48), புத்ததாச (வயது-58) ஆகிய சகோதரர்கள் இருவருமே உயிரிழந்தவர்கள் ஆவர்.

மேற்படி சகோதரர்கள் இரு வரும் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது, அதி சொகுசு வாகனம் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இளைய சகோதரர் லால் சிறிசேன பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

தற்போது பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# அஞ்சா நெஞ்சம் படைத்த வீரப்பெண்

(14 ஆம் பக்கம் பார்க்க...)

★ தந்தையின் வழியில் பத்திரிகைத்துறையில் நுழைந்தவர் கௌரி லங்கேஷ். 1980 ஆம் ஆண்டு முதல் ரைம்ஸ் ஆப் இந்தியா, சண்டே மேகஸின் போன்ற பத்திரிகையில் பணியாற்றி வந்தார்.

★ 2000 ஆம் ஆண்டு இவரின் தந்தை காலமானார். தொடர்ந்து பத்திரிகையை யார் நடத்துவது என்பதில் கௌரி லங்கேஷுக்கும், சகோதரர் இந்திரஜித் லங்கேஷுக்கும் சில கருத்து வேறுபாடுகள் எழுந்தன. அதன்பிறகு, 'கௌரி லங்கேஷ் பத்ரிகே' எனத் தனது பெயரில் பத்திரிகை தொடங்கி, ஆசிரியராகப் பொறுப்பேற்றார் கௌரி.

★ ஊடகங்களில் சுதந்திரத்தைப் பற்றி தொடர்ந்து குரல் கொடுத்தவர். அரசியல் தத்துவங்களின்அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட மக்கள் ஒடுக்கப்படுவதைத் தனது எழுத்துகள் மூலம் கண்டித்தவர். 2016 ஆம் ஆண்டு, இந்து தத்துவ அமைப்புகள் தொடர்ந்து கருத்துச் சுதந்திரத்தை முடக்கி வருகிறது என்று ஒரு பேட்டியில் அழுத்தமாகத் தெரிவித்தார்.

★ டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் போராடிய கன்னையா குமாருக்குத் தொடர்ந்து ஆதரவு தெரிவித்தார் கௌரி லங்கேஷ். குஜராத் மாநிலத்தில், பசு காவலர்கள் தலித் மக்கள் மீது நடத்தும் வன்முறைகளை எதிர்த்து வருபவர், ஜிக்னேஷ் மெவானி (Jignesh Mevani). கன்னையா குமாரையும், ஜிக்னேஷையும் தன் சொந்த மகன்போல கருதினார் கௌரி.

★ இந்தியாவில் நிலவிவரும் சாதி அமைப்பு பற்றியும், மதச் சார் புடைய அரசமைப்பைப் பற்றியும் கௌரி தொடர்ந்து தனது அனல் பறக்கும் எழுத்துகளில் வெளிப்படுத்தினார்.

★ 2016 ஆம் ஆண்டு நவம்பரில், கர்நாடக பி.ஜே.பி கட்சியைச் சேர்ந்த ப்ராஹலாத் ஜோஷி மற்றும் உமேஷ் துஷி பற்றி இவர் எழுதிய கட்டுரை பெரும் சர்ச்சையில் சிக்கியது. இதனைத் தொடர்ந்து, கௌரி மீது அவதூறு வழக்குப் பதிவுசெய்தனர். இந்த வழக்கில் கௌரிக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், தண்டனை வழங்கப்பட்ட அதே நாளிலேயே பிணையில் வெளியில் வந்தார்.

★ 2015 ஆம் ஆண்டு, மூத்த பத்திரிகையாளர் எம்.எம். குல்பர்கி கொல்லப்பட்டபோது, இந்து தத்துவ அமைப்புகளும் மோடி ஆதரவாளர்களும் அவர்களுடைய தத்துவத்தை எதிர்ப்பவர்களைக் கொலை செய்வதை வரவேற்கின்றனர் என்று ஓங்கிக் குரல் கொடுத்தவர் கௌரி லங்கேஷ்.

★ கௌரி கொல்லப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்பு, சிலர் அவரைப் பின் தொடர்ந்திருந்தனர் எனக் காவல்துறை தெரிவித்துள்ளது. அவருக்குப் புதிய எண்ணிலிருந்து அழைப்புகள் வந்தன எனவும், அவர் வசிக்கும் தெருவில் வெள்ளை நிற கார் கடந்த சில நாள்களாகச் சுற்றிவந்தன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ கொலை நடந்த நாளன்று அவர் தனது அன்றாப் பணியை முடித்துக்கொண்டு, காரில் வீடுதிரும்பினார். வீட்டுவாசலை நெருங்கியபோது, அவரை நோக்கி ஏழு துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. அதில் மூன்று குண்டுகள் அவர் மீது பாய்ந்தன.

★ தனது வாழ்நாள் முழுவதும் அச்சமின்றி செயற்பட்ட கௌரி லங்கேஷின் மரணத்துக்குப் பதில் அளிக்குமா மோடி அரசு?

# போர்ச் சூழலும்...

(06 ஆம் பக்கம் பார்க்க...)


நடுத்தர வர்க்க மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் பைலட் பேனை செல்வாக்கு பெற்றிருந்தது. அதன் பின்னர் ஹீரோ, பிளட்டினம் போன்ற பேனைகள் சந்தையில் பிரவேசித்திருந்தன. இறுதியாக சியால் என்ற பெயரிலான ஊற்றுப் பேனை மாணவர்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு சந்தையில் விடப்பட்டிருந்தது.

ஆனால் இந்தப் பேனைகள் அனைத்தும் மையை நிரப்பி வைத்துக் கொண்டு எழுதக்கூடியவை. இதற்கு முன்னதாக தொட்டு எழுதுகின்ற ஒரு பேனை பாவனையில் இருந்தது. மரப்பலகை ஒன்றின் நடுப்பகுதியில் இணைக்கப்பட்ட மூடியுடன் கூடிய இரண்டு சிறிய போத்தல்களில் மை நிரப்பப்பட்டிருக்கும். சிவப்பு மை ஒரு போத்தலிலும், நீல நிற மை மற்றுமொரு போத்தலிலும் விட்டிருப்பார்கள். அதன் அருகில் ஒரு கட்டைப் பேனையை வைப்பதற்கான அமைப்பு இருக்கும் நீளமான தடிபோன்ற அந்தக் கட்டைப் பேனையின் ஒரு முனையில் எழுதுவதற்குரிய நிப் பொருத்தக்கூடிய அமைப்பைக் கொண்டிருக்கும். அந்தப் பேனையைப் பயன்படுத்திஇ நிப்பை மையில் தோய்த்து தோய்த்து எழுதுவார்கள்.

இந்தக் கட்டைப் பேனையையே குருநாதன் பயன்படுத்தி வந்தார். பத்திரிகை அலுவலகங்களில் செய்தி எழுதுவதற்காகடிமைபேப்பரையே பயன்படுத்தினார்கள். இந்தத் தாள் மை ஊறக்கூடியது. அவ்வாறு இருந்த போதிலும், மிகவும் நேர்த்தியாக தாளில் மை ஊறாத வகையில் மிகவும் உறுப்பான எழுத்துக்களில் எழுதும் ஆற்றலை குருநாதன் பெற்றிருந்தார். அந்தத் தாள்களில் மிகவும் தெளிவாக அவருடைய எழுத்துக்கள் முத்து முத்தாக அழகாகக் காட்சியளிக்கும்.

வானொலி செய்தி அறிக்கையும், எழுத்து வேகமும் மையைத் தொட்டு எழுதிய போதிலும், மிகவும் வேகமாக எழுதுவார். ஆங்கிலமானாலும் சரி, தமிழானாலும்சரி அவர் செய்தி எழுதும் இலாவகத்தையும் எழுதும் வேகத்தையும் பார்க்கும் போது மிகவும் ஆசையாகவும் இருக்கும். அற்புதமாகவும் இருக்கும். **(மிகுதி நாளை)**

# அதிர்ந்தது மெக்ஸிக்கோ; 60 பேர் பரிதாபச் சாவு!



8.2 ரிச்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம்





தென்மேற்குப் பசுபிக் கடலோரம் அமைந்துள்ள மெக்ஸிக்கோ நாட்டின் தெற்குக் கடல் பகுதியில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதில் 60 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயம் அடைந்தனர். இது ரிச்டர் அளவு கோலில் 8.2 அலகுகாகப் பதிவாகி உள்ளது.

உள்ளூர் நேரப்படி கடந்த வியாழக்கிழமை இரவு 11.30 மணிக்கு (கிரீன்விச் நேரப்படி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 04.50 மணிக்கு இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. சுமார் ஒரு நிமிட நேரம் நீடித்தது.

பிஜிஜியாபன் நகரில் இருந்து தென்மேற்கே சுமார் 123 கிலோ மீற்றர் தூரத்தில், பூமிக்கு அடியில் சுமார் 33 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் தாக்கத்தால் மெக்ஸிக்கோ நாடே அதிர்ந்தது.

இந்த நில நடுக்கத்தால் பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. தலைநகரையொட்டிய பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. உறங்கிக் கொண்டிருந்த மக்கள் நில நடுக்கம் ஏற்பட்டதை உணர்ந்து அலறியடித்தவாறு எழுந்து, வீதிகளுக்கும், திறந்தவெளி மைதானங்களுக்கும் சென்று தஞ்சம் புகுந்தனர். இடிபாடுகளில் பலர் சிக்கியுள்ளமையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 85 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என புவியியல் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.(ச)

## சவுதி – கட்டார் மன்னர்கள் நேற்று பேச்சு!



தூதரக ரீதியிலான உறவுகளை முறித்துக் கொண்ட நிலையில், சவுதி மன்னர் சல்மான், கட்டார் இளவரசர் ஷேக் தமீம் உடன் தொலைபேசியில் நேற்றுப் பேச்சு நடத்தி உள்ளார்.

தீவிரவாத இயக்கங்களுக்கு மறைமுகமாக உதவுகிறது எனக்கூறி கட்டாருடனான தூதரக உறவை சவுதி, எமிரேட்ஸ் உள்ளிட்ட ஆறு நாடுகள் முறித்துக்கொண்டன. வளைகுடா நாடுகளுக்கிடையே நடந்துள்ள இந்த மோதல் சில மாதமாகப் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில், நேற்று முந்தினம் கட்டார் - அரபு நாடுகளுக்கிடையே மத்தியஸ்தம் செய்யத் தயார் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே மேற்படி பேச்சு இடம்பெற்றுள்ளது.

இரு தலைவர்களின் பேச்சு தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ச)

## பாக். முன்னாள் பிரதமர் மீது 4 ஊழல் வழக்குகள் பதிவு!

### 16 பெட்டிகளில் ஆவணங்கள், வாகனங்கள் மூலம்!



இஸ்லாமாபாத், செப். 10

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீது 4 ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

அதனை அடுத்து, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் நவாஸ் ஷெரீப் பிரதமர் பதவியையும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்தார்.

இந்த நிலையில், மேற்படி வழக்கு இஸ்லாமாபாத்தில் உள்ள தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டு அங்கு ஆய்வு செய்யப்பட்டது. அதற்காக நவாஸ் ஷெரீப்பின் குடும்பத்தினர் மீதான வழக்குகள் தொடர்பான ஆவணங்கள் 2 வாகனங்கள் மூலம் 16 பெட்டிகளில் எடுத்து வரப்பட்டன.

இறுதியில் நவாஸ் ஷெரீப், அவரது மகன், மகள் மற்றும் மருமகன் ஆகியோர் மீது 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவை விசாரணை நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கு தலா 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்த வழக்கில் முன்னாள் நிதிஅமைச்சர் இஷாக்தர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## புளோரிடாவை நோக்கி முன்னேறும் 'இர்மா' புயல்!

### 50 லட்சம் மக்களை வெளியேற உத்தரவு

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை நோக்கி 'இர்மா' புயல் முன்னேறுகின்றமையால், அங்கு வாழ்கின்ற சுமார் 50 லட்சம் மக்களை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அட்லாண்டிக் கடலில் உருவான 'இர்மா' புயல். ஏற்கனவே அமெரிக்காவின் கீழ் பகுதியில் உள்ள கரீபியன் கடலில் உள்ள தீவு நாடுகளைத் தாக்கி துவம்சம் செய்தது. தற்போது புளோரிடாவுக்குள் நுழைந்துள்ளதால் அங்கு பலத்த காற்றுடன் தொடர் மழை பெய்து வருகிறது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பிறந்தவுடனேயே 55 சிசுக்கள் சாவு!



உத்தரப் பிரதேசத்தில் தொடர் சோகம்!

மும்பை.செப்.10

நாசிக்கில் உள்ள அரச மருத்துவமனையில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் புதிதாகப் பிறந்த 55 குழந்தைகள் உயிரிழந்துள்ள சம்பவம் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

உத்தரப்பிரதேசத்தின் கோரக்பூரில் உள்ள பாபா ராகவ்தாஸ் அரச மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த மாதம் 10 ஆம் , 11 ஆம் திகதிகளில் மட்டும் சுமார் 70 குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியது.

இதேவேளை, அங்குள்ள பரூக்காபாத் மாவட்ட அரச மருத்துவமனையில் கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வரையிலான ஒரு மாதத்தில் மட்டும் 49 குழந்தைகள் உயிரிழந்தமை வெளிச்சத்துக்கு வந்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்தச் சோகச்சுவடுகள் மறைவதற்குள் நாசிக்கில் உள்ள அரச மருத்துவமனையில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் புதிதாகப் பிறந்த 55 குழந்தைகள் உயிரிழந்துள்ள சம்பவம் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து இதுவரையில் அந்த மருத்துவமனையில் 187 குழந்தைகள் உயிரிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir





23 ஆண்டுகளுக்கு முன்பு என் தோழியைப் பார்த்துத்தான் நகங்களை வளர்க்கும் ஆர்வம் வந்தது. ஒரு கட்டத்தில் நகங்களைப் பராமரிப்பதும் வளர்ப்பதுமே என் முழு நேர வேலையாக மாறிவிட்டது.

# மிக நீளமான நகங்களைக் கொண்ட பெண்!

அமெரிக்காவின் டெக்சாஸ் நகரைச் சேர்ந்த அயன்னா வில்லியம்ஸ் உலகிலேயே மிக நீளமான நகங்களைக் கொண்ட பெண் என்ற கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளார். அடுத்த வருடம் கின்னஸ் புத்தகத்தில் அவரது பெயர்இடம்பெற உள்ளது. இவருடைய ஒவ்வொரு நகங்களும் சுமார் 2 அடி நீளம் உடையன.

இது தொடர்பில் அயன்னா தெரிவித்தவை வருமாறு:-

என் வாழ்நாளில் பெரும்பாலான நேரத்தை நகங்களை வளர்ப்பதற்கே செலவிட்டு இருக்கிறேன். 23 ஆண்டுகளுக்கு முன்பு என் தோழியைப் பார்த்துத்தான் நகங்களை வளர்க்கும் ஆர்வம் வந்தது. ஒரு கட்டத்தில் நகங்களைப் பராமரிப்பதும் வளர்ப்பதுமே என் முழு நேர வேலையாக மாறிவிட்டது. பின்னர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது.

23 ஆண்டுகளாக நகங்களை வெட்டாமல் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறேன். இப்போது அந்த சாதனையை எட்டிவிட்டேன். எனக்கும் என்குடும்பத்தினருக்கும் எல்லையற்ற மகிழ்ச்சி.

குடும்பத்தினரின் ஒத்துழைப்பால்தான் நகங்களை இவ்வளவு பெரிதாக வளர்க்க முடிந்தது. இவ்வளவு நீளமான நகங்களை வைத்துக் கொண்டு எந்த வேலையும் என்னால் செய்துவிட முடியாது. எல்லாவற்றுக்கும் பிறரின் உதவியை நாட வேண்டும்.-எனத் தெரிவித்துள்ளார்.

# மிளகாய் ராணி!




மிளகாய் உண்ணும் போட்டி இங்கிலாந்தில் மிகப் பிரபலமானது. இங்கே நடைபெறும் மிளகாய் உண்ணும் போட்டியில் ஒவ்வொரு சுற்றுக்கும் மிளகாயின் காரம் அதிகரிக்கப் படும்.

போட்டியில் கலந்துகொள்வது எவ்வளவு பெருமையானதோ அதேபோல கடினமானதும்கூட. நடுத்தர வயதில் உள்ள சிட் பார் பர் என்ற பெண் 2014 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் போட்டியில் தன் ஆதிக்கத்தைத் தொடர்ச்சியாகச் செலுத்தி வருகிறார். 'தோற்கடிக்க முடியாத சிட்' என்று இவரை எல்லோரும் அன்புடன் அழைக்கிறார்கள்.

காரத்தை விரும்புகிறவர்கள் எல்லாம் இந்தப் போட்டியில்எளிதாகவென்று விட முடியும் என்று சொல்லிவிட இயலாது. ரெட் ஃப்ரெஷ்னோ, ஜலபெனோ போன்ற மிளகாய்களைச் சாப்பிட்டால் பின்விளைவுகளைச் சந்திக்காமல் இருக்க முடியாது. போட்டி யின் ஒவ்வொரு சுற்றுக் கும் காரத்தின் தன்மை அதிகரிக்கப்படும். காரத்தைத் தாக்குப் பிடிக்க இயலாமல் பலரும் வெளியேறிவிட இறுதிச் சுற்றில் சிலர் மட்டுமே கலந்துகொள்வார்கள். அவர்களுக்கு உலகிலேயே மிகக் காரமான கரோலினா ரீப்பர் மிள காய்கள் வழங்கப்படும். இதையும் சாப்பிட்டு முடிப்பவரே வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

இது மிகக் கடினமான போட்டி. மிளகாய் சாப்பிடும்போது காரத்தைத் தாங்க முடியாமல் தண்ணீர் குடித்து விட்டால், போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப் படுவார்கள். பலரும் காரத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் கண்ணீர் விட்டுக் கொண்டே போட்டியில் பங்கேற்பார்கள்.

'காரத்தைத் தணிக்க பாலைக் குடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் வேகமாக மிளகாய்களைச் சாப்பிட்டுவிடுவேன். இந்தப் போட்டி பணத்துக்காகக் கலந்து கொள்ளும் போட்டி இல்லை. 4 ஆயிரத்து 500 ரூபா(இங்கிலாந்து பெறுமதி) தான் பரிசுப் பணம். காரத்தின் பின் விளைவுகளைச் சரி செய்வதற்கே இந்தப் பணம் போதாது. சவால்களை விரும்புகிறவர்களும் வலியைத் தாங்கிக் கொள்ள கூடியவர்களும் மட்டுமே இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும்'- என்கிறார் சிட் பார்பர்.



# நெருப்பும் பனியும் நிறைந்த புவியியல் அற்புதம் சிலி!

அனல் வீசும் வெப்பம் மற்றும் நடுங்க வைக்கும் குளிரைக் கொண்ட சிலி, தென் அமெரிக்காவின் மேற்குக் கரையில் ஆண்டஸ் மலைகள் மற்றும் பசுபிக் கடலுக்கு இடையே அமைந்துள்ள நாடாகும்.

இது வடக்கில் பெருவையும், வட கிழக்கில் பொலிவியாவையும், கிழக்கு எல்லையாக ஆர்ஜெண்டினாவையும், தாழ்வான பாலைவனம், செழிப்பான மழைக்காடுகள் என 2 ஆயிரத்து 700 மைல் நீளமான நிலப்பகுதியை கொண்டுள்ளது.

2 ஆயிரம் தொடர் எரிமலைகளைக் கொண்டிருக்கும் சிலி , உலகில் அதிகமான எரிமலைகளை கொண்ட நாடுகளில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இங்குள்ள 500 எரிமலைகள் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் நிலையில் உள்ளன என நம்பப் படுகிறது.

வடக்கு சிலியில் எல் டைட்டோவில் எரிமலைகள் வெடிக்கும்போது அங்கிருக்கும் 80 வெந்நீரூற்றுகள் கொதிநிலையில் உள்ள வெந்நீரை மேல்நோக்கித் தள்ளுகின்றன. நாட்டின் மிகவும் வறட்சியான பகுதியை வடக்குப் பகுதியில் பார்க்கலாம்.

இங்கு பூமியின் மிக உயரமான இடத்தில் துருவப் பகுதிக்கு வெளியே அமைந்துள்ள வறண்ட அச்சம் விளைவிக்கக்கூடிய 'அடகாமா' பாலைவனமும் உள்ளது. இந்தப் பகுதியின் மழைப் பொழிவு ஆண்டுக்கு 15 மில்லி மீற்றர் மட்டும்தான். சில பருவ நிலை கண்காணிப்பகங்களில் இதுவரை மழையே பதிவு செய்யப்படவில்லை. பசுபிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களால் சூழப் பட்டிருக்கின்றமையால் இங்கு ஈரப்பதமும் அரிதே.

தெற்கு பேதகொனியன் பனிவெளியில் (ice field) இருந்து மலைகளின் குறுக்கே பனிப்பாறை ஆறு பாய்கிறது. இந்தப் பனியாறு டோரஸ் டெல் பைன் தேசிய பூங்காவில் முடிவடையும். இது 40 மைல் நீளம் உடையது.

இங்கு தட்பவெப்பம் 25 டிகிரியாக இருக்கின்றமையால் இந்த பனிப்பொழிவு நீண்ட காலம் நிலைக்கலாம் என்று கருதப்படுகிறது,தெற்கு எல்லைப்பகுதியில் தெற்கு பகுதிப் பெருங்கடலில் பனிக்கட்டியால் சேதப்படுத்தப்பட்ட மலைகள் முடிவடையும் இடம் கேப் ஹார்ன் என்று அழைக்கப்படுகிறது.

சிலி நாடு தீயும், பனியும் என நேரெதிர் இயற்கை பரிணாமங்களை வடக்கில் இருந்து தெற்கு வரை தன்னகத்தே கொண்டுள்ளது.





# பாடசாலை கிரிக்கெட்டை மீட்டெடுக்க கல்வி அமைச்சு விசேட திட்டம்!

இலங்கைக் கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கிலும், பின்னடைவை எதிர்நோக்கியுள்ள பாடசாலை கிரிக்கெட்டை முன்னேற்றுவதற்காகவும் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்குஅமைய முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களைக் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவினால் பாடசாலை கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முன்வைக்கப்படுகின்ற முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளுக்கமைய கல்வி அமைச்சும், பாடசாலை கிரிக்கெட் சங்கமும் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கவுள்ளவேலைத் திட்டத்துக்கு கல்வி அமைச்சர் தலைமை தாங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் அணிக்குத் தேவையான திறமையான வீரர்களை பாடசாலை மட்டத்திலிருந்து உருவாக்கும் நோக்கில் இவ் வேலைத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதன்படி இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீரருமான மஹேல ஜயவர்த்தன, ஜயந்த செனவிரத்ன உள்ளிட்ட பயிற்றுவிப்பாளர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுடன் அதை நடைமுறைப்படுத்த இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் முன்வந்துள்ளது.

இலங்கைக்கிரிக்கெட் அணி அண்மைக்காலமாக சந்தித்து வருகின்ற தொடர் தோல்விகளுக்குப் பாடசாலை கிரிக்கெட்டும்பொறுப்புக்கூற வேண்டும் எனவும், பாடசாலை மட்டத்தில் விளையாடுகின்ற வீரர்கள் சரியான முறையில் வெவ்வேறு அணிகளாக பிரிக்கப்படாமை கிரிக்கெட் விளையாட்டு பின்னடைவை சந்திக்க ஏதுவாக உள்ளது. என கல்வி அமைச்சர் பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தின் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

எனினும், பாடசாலை மட்ட வீரர்களுக்கு மத்தியில் பாடசாலை அணியொன்றை உருவாக்கத் தவறியமை, அவர்களிலிருந்து தேசிய அணிக்காக வீரரொருவரைத் தெரிவு செய்வதில்நடந்துகொண்ட முறையற்ற விதம், உள்ளிட்டவை தொடர்பில் கிரிக்கெட் சங்க அதிகாரிகள் அமைச்சரிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இந்நிலையில் பாடசாலை வீரர்களுக்கான தனிக் குழாமை அமைக்கின்ற போது வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு அணித் தெரிவை மேற்கொள்வதற்கான விதிமுறைகளை பட்டியலிட்டு அறிவிக்குமாறு கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் முக்கிய சில முன்மொழிவுகள் குறித்துகூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது.

இதில் பாடசாலை மட்டக்கிரிக்கெட்போட்டிகளுக்காக உயர் மட்ட பயிற்சி குழாமொன்றை ஏற்படுத்துவது, பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவது, பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருந்துகொண்டு கிரிக்கெட் விளையாடி வருகின்ற கிராமப்புற வீரர்களை தேசிய மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு விசேட பயிற்றுவிப்பாளர்கள் குழுவொன்றை நியமிக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதுடன், இவையனைத்துக்கும்இலங்கை கிரிக்கெட்நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இவ்விசேட கலந்துரையாடலுக்குபாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் கபில ஜயலத், தலைவர் ஒஸார பண்டிதரத்ன, பாடசாலை கிரிக்கெட்டின் தெரிவுக் குழுத் தலைவர் டில்ஷான் டி சில்வா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## திருநெல்வேலி கிரிக்கெட் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி



(கங்கா)

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தால், திருநெல்வேலி கிரிக்கெட் அணி, 7 விக்கெட்டுகளால் நியுஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வென்றது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறீமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்ட மொன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியை எதிர்த்து நியுஸ்ரார் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய, நியுஸ்ரார் அணி 20 ஓவர்களில், 9 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மோகனதீபன் 34, நம்மியஇராகுலன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி அணி சார்பாக, பிரபவன், ஜசிந்தன், சிவராஜ் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

115 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பொடுத்தாடிய திருநெல்வேலி அணி, ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களான அசோக்குமார் - தர்சிகன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால், 15.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. தர்சிகன் 37, அசோக்குமார் 32 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். நம்மிய இராகுலன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## தெரிவுக்குழுத் தலைவர் யார்?

இலங்கை அணியின் அடுத்த தெரிவுக்குழுத் தலைவராக அரவிந்த டி சில்வாஅல்லது ரொஷான் மஹாநாம ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சனத் ஜெயசூரியா தலைமையிலானஇலங்கை கிரிக்கெட் தேர்வுக்குழு நேற்று முன்தினத்துடன் தங்களது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளது.இந்த இராஜினாமாக் கடிதத்தை ஏற்கனவே விளையாட்டுத்துறை அமைச்சருக்கு கையளித்த போதிலும் இந்தியத் தொடர்வரை தாங்கள் பதவியில் நீடிப்போம் எனத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினத்துடன் இந்திய - இலங்கைத் தொடர் நிறைவடைந்துள்ளதால் தேர்வுக்குழுவின் பதவிக் கால காலக்கெடுவும் நிறைவடைந்துள்ளது.

இதற்கிடையில் இம்மாத இறுதியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணிக்கெதிரான தொடரில் இலங்கை அணி விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்காக இலங்கை அணியைத் தெரிவு செய்யும் பொறுப்பு யாரிடம் என்பது பெரும் எதிர்பார்ப்பாக இருக்கும் வேளையில், இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான அரவிந்த டிசில்வா, மற்றும் ரொஷான் மஹாநாம ஆகியோரில் ஒருவர் தெரிவுசெய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## பாடசாலை துடுப்பாட்ட அணிகளுக்கு துடுப்பாட்ட உபகரணங்கள்







(கங்கா)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த, கிரிக்கெட் தாக்குதல் (கிரிக்கெட் பாஸ்) துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றிய பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கு துடுப்பாட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் மற்றும் பிரித்தானிய தமிழ் கிரிக்கெட் லீக் இணைந்து, வடக்கு - கிழக்குப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் இருபது - 20 துடுப்பாட்டச்சுற்றுப்போட்டியொன்றை நடத்தின. இந்தச் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 20 அணிகள் பங்குபற்றியிருந்தன.

பங்குபற்றிய அணிகளுக்கு இந்த உபகரணங்களை பிரித்தானிய தமிழ் கிரிக்கெட் லீக் வழங்கியது. கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற இந்த இறுதிநாள் நிகழ்வில் இந்த உபகரணங் கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மன்னார் சித்தி விநாயகர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, மட்டக்களப்பு இந்துக் கல்லூரி ஆகிய அணிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பயிர்செய்யப்படாதுள்ள தனியார் காணிகளை பயிர் செய்வோருக்கு வழங்க நடவடிக்கை

## சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும், ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, செப்.10

பயிர் செய்யப்படாதுள்ள அனைத்துத் தனியார் காணிகளையும் பயிர்செய்வோருக்கு வழங்குவதற்கு தற்போதுள்ள சட்டதிட்டங்களின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வறட்சியினால் அழிவுக்குள்ளான பயிர் நிலங்களை மீண்டும் பழையநிலைக்குகொண்டுவந்து உணவு உற்பத்தியை மேம்படுத்துவதற்கு அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

திம்புலாகலை புதிய பிரதேச சபை கட்டிடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயேஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்தெரிவிக்கையில்,

பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கு அரசின் அனைத்து காணிகளும் பயன் படுத்தப்படவுள்ளன. பயிர்செய்யப்படாதுள்ள அனைத்துதனியார்காணிகளும் கட்டாயமாக பயிர்ச்செய்யப்பட வேண்டும்.

நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடுவித்து நாட்டின் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தி, நாளையதலைமுறைக்கு சுபீட்சமான ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்காகவே இந்த அனைத்து தீர்மானங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

கல்வி, சுகாதாரம், சமூகநலன் பேணல் ஆகிய அனைத்து துறைகளிலும் நாட்டில் சமமான அபிவிருத்தியை முன்னெடுக்கின்றோம். அபிவிருத்தியின் நன்மைகள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் அரசின் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்று ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் எதிர்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் விமர்சனங்களைப் பார்த்துக்கொண்டிருக்காமல் அரசு என்ற வகையில் எனக்கு வழங்கப் பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவேன். – என்றார். (ம)

# யாழ். இந்து மகளிர் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் 2017ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை கல்லூரியின்விசாலாட்சி மண்டபத்தில் காலை 9 மணிக்கு அதிபர் திருமதி எம்.விமலநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதி பிரதம செயலாளரும் (நிர்வாகம்) கல்லூரியின் பழைய மாணவியுமான திருமதி சரஸ்வதி மோகநாதன் கலந்து கொள்வார். (சு)

# லஞ்ச, ஊழல் குற்றவாளிகளை வைத்தியசாலையில் சேருங்கள்

## இப்படிக் கோர வேண்டி ஏற்படும் என்கிறது ஜே.வி.பி.

இலஞ்சம் மற்றும் ஊழலில் ஈடுபடுபவர்களை சிறைச்சாலைகளில் அடைக்குமாறு கோருவதற்குப் பதிலாக, அவர்களை வைத்தியசாலைகளில் சேர்க்குமாறு நாம் கோரவேண்டிய நிலை எதிர்காலத்தில் ஏற்படும் என, மக்கள்விடுதலைமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தொவித்துள்ளார்.

சில்ஆடைமோசடிதொடர்பில் சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அனுபெல்பிட்ட ஆகியோர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மோசடியில் ஈடுபட்ட மேற்படி லலித் வீரதுங்க, அனு பெல்பிட்ட ஆகிய இருவரையும் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்ட மறுதினமே அவர்கள் இருவரும் சிறைச்சாலை வைத்தியசாலையில் சோக்கப்பட்டனர்.

இந்த நிலையிலேயே மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். (ம)



அமரத்துவமடைந்த ஹதமுண கங்காராம விகாராதிபதி பொலன்னறுவை பிராந்திய பிரதம சங்க நாயக்கர் அதி வண.அலவ்வே ஞானவாச தேரரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இறுதி அஞ்சலி செலுத்தியபோது...

# ஆன்மீக உரை

உரும்பிராய், செப். 10

உரும்பிராய் சந்தி இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலைய பிரார்த்தனை மண்டபத்தில் இன்று ஞாயிறு காலை 5 மணிக்கு விசேட ஆன்மீக உரை இடம்பெறும்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் ஸ்ரீமத் சுவாமி ரிதமயானந்தஜி மகராஜ் உரை நிகழ்த்துவார். (இ)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதலின்போது தாக்குதலுக்கு உள்ளான நபர் பயணித்த மோட்டார் சைக்கிள் தீ வைத்து எரிக்கப்பட்டது. பெறுமதிமிக்க மோட்டார் சைக்கிள் முழுவதுமாக தீயில் எரிந்து நாசமானது. (ம)

### முதலமைச்சருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மக்கள் தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர் எனவும் அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, அஸ்கிரிய பீட மகாநாயகர் வடக்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமையைச் சுட்டிக்காட்டிய அமைச்சர்கள், அதேபோன்று மல்வத்து பீட மகாநாயக்கரும் வடக்கிற்கு விஜயம் செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். (ம)

### கஞ்சிகுடிச்சாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் மேற்படி சிரமதானம் இடம்பெற்றது.

கடந்த 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை சத்துருக்கொண்டான் மாவீரர் துயிலும் இல்லத்தில் தீபம் ஏற்றி நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. பின்னர் படையினரின் தாக்குதல்கள் காரணமாகவும் அந்தப் பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதாலும் அங்கு நினைவேந்தல் இடம்பெறவில்லை.

எதிர்வரும் நவம்பர் மாதம் இந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு வசதியாகவே தற்போது இந்தத் துயிலும் இல்லம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம)

### பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவல்கடமைக்குச்சென்றபோதே அவர் காணாமற்போனார் எனக் கூறப்படுகின்றது. மேற்படி சிப்பாயைக் கண்டுபிடிப்பதற்காக இராணுவத்தினர் தீவிர தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி சிப்பாய் தப்பிச் சென்றாரா அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் காணாமற் போனாரா என்பது தொடர்பாக இராணுவப் பொலிஸாரும் இராணுவத்தினரும்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# எழுத்தூர் அடைக்கல அன்னையின் திருவிழாவெள்ளியன்று இடம்பெற்றது

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள எழுத்தூர் புனித அடைக்கல அன்னை ஆலயத் திருவிழா பங்குத்தந்தைஅருட்பணிபி.யேசுராஜா அடிகளார் தலைமையில் வெள்ளிக்கிழமை (08.09.2017) கொண்டாடப்பட்டது. 30.08.2017 மாலை கொடியேற்றத்துடன் ஒன்பது தினங்கள் மாலை செபமாலை, திருப்பலி, மறையுரைகள் பல அருட்பணியாளர்களால் நடாத்தப்பட்டதுடன் இறுதி நாளாகிய வெள்ளிக்கிழமை (08.09.2019) மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் பங்குத் தந்தை அருட்பணி பி.யேசுராஜா, அருட்பணி பிரான்சீஸ் மெர்டீக்கோன் அடிகளார் இணைந்து திருவிழா திருப்பலியைஒப்புக்கொடுத்தனர்.






### பேரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழியின்றி இத்தகைய நிலைப்பாட்டை எடுத்து அறிவிக்கின்றது என சில தரப்புகளினால் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டமையை அடுத்தே இந்த விடயத்தைத் தெளிவுபடுத்த கூட்டமைப்பு முயன்றிருக்கிறது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு சம்பந்தமான இடைக்கால வரைபோடு சேர்த்துக்கொள்ளப்பட இருக்கின்ற, பல்வேறு கட்சிகளின் நிலைப்பாடு சம்பந்தமான, அறிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களாகிய இரா. சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் கையொப்பத்துடன் கடந்த ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் நேரடியாகக் கையளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மறுதினமே (ஓகஸ்ட் 30,2017) குறித்த ஆவணம் அரசமைப்பு வழிநடத்தல் குழு செயலகத்துக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்த ஆவணம் கையளிக்கப்பட்ட நேர காலம் தொடர்பில் வெளிவரும் மாறுபட்ட நிலைமைகளை தெளிவுபடுத்தும் நோக்கில் இந்த ஊடக அறிக்கை வெளியிடப்படுகின்றது. – என்று உள்ளது. (உ)

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமஷ்டிமுறைஎன்பதுநாட்டை பிரிக்கும்ஒருதீர்வுத்திட்டம்அல்ல எனவும் மாறாக அது நாட்டை ஒன்றுபடுத்தும் திட்டம் என்பதை மல்வத்து பீட மகாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தினார் எனவும் வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி தொடர்பில் தான் தெளிவான விளக்கத்தை அவர்களுக்கு வழங்கினேன் என்றும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக மகாநாயக்க தேரர்களிடம் விலாவாரியாக – பல்வேறு விடயங்களையும் விவரித்து கூறினேன் என்றும் முதலமைச்சர் கூறினார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஸ்ரீ சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

அவ்வேளை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த முதலமைச்சர், அரசியலை தவிர்த்து பொது வான விடயங்கள் தொடர்பிலேயே சந்திப்பின்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது எனச் சுட்டிக் காட்டினார்.

தென் பகுதி ஊடகங்கள் வட பகுதி மக்கள் தொடர்பில் தவறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணம் சம்பந்தமாக தெற்கில் வாழும் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாடு உருவாகியுள்ளது எனக்குறிப்பிட்ட முதலமைச்சர், பௌத்த மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தவாய்ப்புகிடைத்தது எனவும் கூறினார். (இ-ச)

# தீர்மான உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும்!

## இலங்கையை வலியுறுத்துகிறது அமெரிக்கா

கொழும்பு, செப்.10

இலங்கை அதன் மறுசீரமைப்பு இலக்குகளில் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அமெரிக்காவின் தெற்கு மத்திய, ஆசியப் பிராந்தியத்திற்கான பதில் உதவி இராஜாங்கச் செயலாளர், அலிஸ் வெல்ஸ், வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய நிதி விவகாரங்களுக்கான உப குழுவின் விசேட கூட்டத்தின் போது தெற்காசியாவில் அமெரிக் காவின் செல்வாக்கைப் பேணுதல் என்ற தொனிப் பொருளில் அலிஸ் வெல்ஸ் உரையாற்றினார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, 2015 தேர்தல்களில் இருந்து. மறுசீரமைப்பு மற்றும் நல்லிணக்கத்துக்கான பாதையை அறிமுகப்படுத்தியது.

அதன் பணியாளர்களின் திறனை மேலும் அதிகரிக்கவும், பொதுமக்களை மேலும் அதிகாரமளிக்கவும், இலங்கையுடன் அமெரிக்கா பங்காளராக இணைந்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி, ஆட்சி, வர்த்தகம், மற்றும் பாதுகாப்பு விடயங்களில் எமது ஒத்துழைப்பு தொடர்ந்து வருகிறது.

கடந்த 2015 இல் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எமது நாடுகள் இணங்கிக் கொண்ட, 30/1 தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காகவும், மீண்டும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 2017 மார்ச்சில் உறுதிப்படுத்திக் கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காகவும் அமெரிக்கா இணைந்து செயற்படுகிறது.

இலங்கை அரசு மரபுசார் நீதி மற்றும் 26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் மீறல் அனுபவங்களை அரசமைப்பு, சட்டமன்றம் மற்றும் பாதுகாப்பு மறுசீரமைப்பு ஊடாக, வன்முறைகள் மீள நிகழாமல் தடுத்தல், போன்றவற்றுக்கு இந்த தீர்மானங்கள் உறுதியளிக்கின்றன.



மத்திய அரசிடம் இருந்து ஸ்ரீலங்கா பிராந்தியங்களுக்கு கூடுதல் நிர்வாக அதிகாரங்களைப் பகிரும் அரசமைப்பு மறுசீரமைப்பு, பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக, அனைத்துலக தரம் வாய்ந்த நியாயமான சட்டத்தைக் கொண்டு வருதல் போன்ற விடயங்களை அது உள்ளடக்கியுள்ளது.

யுத்தத்தின்போது இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட காணிகளை மீள ஒப்படைத்தல், காணாமற்போனோர் அலுவலகம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற விடயங்களும் அந்தத் தீர்மானத்திற்குள் அடங்கும்.

யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குமான நம்பகமான பொறிமுறை போன்ற, நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை உருவாக்குதல், போன்ற சில குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளையும் அந்தத் தீர்மானம் உள்ளடக்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஐ.நா தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்யும்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா அதன் மறுசீரமைப்பு இலக்குகளில் உறுதியானநடவடிக்கைகளைஎடுக்கவேண்டியதேவை உள்ளது என்பதை நாம் உணர்ந்துள்ளோம்எனவும்அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

# 20 ஆவது திருத்தம்; பரிசீலிக்கத் தயார்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் கூறுகிறார்!

13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பறிக்காத வகையில் 20ஆவது திருத்தம் முன்வைக்கப்பட்டால் பரிசீலிக்க தயார் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கூறியுள்ளார்.




20 ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாண சபையை நாடாளு மன்றம் கட்டுப்படுத்தும் வகையிலான சில சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அவை கட்டாயம் திருத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

ஏறாவூர் நகரில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற பொதுக் கூட்டத்திலேயே கிழக்கு முதலமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாண சபைகளை கலைக்கும்அதிகாரங்கள் உள்ளிட்ட சில விடயங்கள் 20 ஆம்திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும், அவை மாகாண சபையை வலுப்படுத்தும் 13 ஆம் திருத்தத்திற்கு முரணானவை.

எனவே, அவற்றை திருத்தம் செய்து 20 ஆவது திருத்தம் முன்வைக்கப்படுமாயின் நாட்டின்நலன்கருதி அதனை சாதகமாகப் பரிசீலிக்க கிழக்கு மாகாண சபை தயாராகவுள்ளது.

அனைத்து மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்துவதாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் தேர்தல் காலங்களில் கூறியிருந்தனர்.அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய தேவை இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

# பாதியில் நிற்கும் வீட்டுத் திட்டங்கள்; கடனில் சிக்கிய கிளிநொச்சி மக்கள்!

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள்குடி யேறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் அதிகளவான குடும்பங்கள் காணப்படுகின்றன என இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து பல்வேறு திட்டங்களினூடாக நிரந்தர வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.



கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் பல்வேறு நிதியுதவியுடன் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களைப் பெற்றுக் கொண்ட கூடுதலான பயனாளிகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகளைக்கொண்ட குடும்பங்கள், வருமானம் குறைந்த குடும்பங்கள் என பல பயனாளிகள் தங்களின் வீடுகளை இதுவரை முழுமைப்படுத்தாத நிலையில் இருந்து வருகின்றனர் என குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பாக 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 'நேர்ப்' திட்டங்களின் கீழ் மூன்று லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் நிரந்தர வீட்டையும் மலசல கூடத்தையும் கட்டிமுடிக்க வேண்டும் என குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தியமையால் இவ்வாறான திட்டங்களைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் அதனை முழுமைப்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக இந்த பிரதேச மக்கள் கூறியுள்ளனர்.

இதனைவிட, ஏனைய திட்டங்களினூடாகவும் கடன்திட்டங்களினூடாக முன்னைய அரசினது ஆட்சியாளர்களாலும், அரசியல் வாதிகளாலும் கடன் திட்டத்தில் வழங்கப்படட வீடுகளைக் கட்டி முடிக்க முடியாமலும், கடன்களைக் கட்ட முடியாமலும் வீட்டுக்காகப் பல்வேறு கடன்களை பெற்று கல்வீட்டுத்திட்டம் என்பதற்காகப் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொடர்ந்தும் கடனாளிகளாக வாழும் நிலை உள்ளது என்று பிரதேசவாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# வீதி விபத்தில் 14 பேர் காயம்!

கொழும்பு, செப். 10

தம்புள்ள - குருநாகல் வீதியில்நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து பொலன றுவை நோக்கிப் பயணித்த தனியார் பஸ், இனாமலுவயிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மற்றுமொரு தனியார் பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் காயமடைந்த 14 பேர் கொகரெல்ல மற்றும் குருநாகல் ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(க)





# மன்னாரில் நேற்று நடமாடும் சேவை

மன்னாரில் நிலமெஹெவர ஜனாதிபதி மக்கள் நடமாடும் சேவை நேற்று சனிக்கிழமை மன்னார் பிரதேச சபையின் ஏற்பாட்டில் மன்னார் அல் அடர் தேசிய பாடசாலையில் நடைபெற்ற போது பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு கலந்து கொண்டமையைக் காணக்கூடியதாக இருந்தது.

மன்னார் பிரதேச செயலாளர் எம்.பரமதாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு வர்த்தக மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இந் நிகழ்வை தொடக்கி வைத்தார்.

இவருடன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மஸ்தான், வட மாகாண சுகாதார அமைச்சர் ஐ.குணசீலன் உட்பட ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பிரதிநிதிகள், திணைக்களங்களின் உயர்மட்ட பிரதிநிதிகள் என பல முக்கியஸ்தர்கள் நடமாடும் சேவையில் கலந்து கொண்டனர்.





மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் 48 திணைக்களங்களுக்கான சேவைகள் இடம்பெற்றன. 11,765 பேர் இந்தச் சேவையில் பயன்பெறுவதற்காக விண்ணப்பித்திருந்தனர் என மன்னார் பிரதேச செயலகப் பிரிவு வட்டாரம் தெரிவித்தது.

அத்துடன் விண்ணப்பிக்காத பலரும் இந்தச் சேவையின் மூலம் பயன்பெறுவதற்காக வருகை தந்திருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது. (இ-112)

# ஜனாதிபதி தலைமையில் சாகித்திய விருது விழா

அரச சாகித்திய விருது வழங்கல் விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தாமரைத் தடாக மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா இலக்கியத் துறையை வளப்படுத்துவதற்கு பங்களித்த எழுத்தாளர்களை கௌரவிக்கும் வகையில் இந்த விழா ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்றது.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியத்தின் மேம்பாட்டுக்காக செய்த சேவையை கௌரவித்து வழங்கப்படும் சாகித்திய ரத்ன விருது பேராசிரியர் ஆரியராஜகருணா, நீர்வை பொன்னையன், ஜீன் அரசநாயகம் ஆகிய எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இலக்கியத் துறைக்கு தனித்துவமான படைப்புகளை வழங்கியமையை கௌரவித்து பல எழுத்தாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.






அரச சாகித்திய விருது விழாவுடன் இணைந்ததாக வெளியிடப்பட்ட விசேட சாகித்திய நினைவு மலர் மற்றும் 2017ஆம் ஆண்டு அரச சாகித்திய விருது பெற்ற இலக்கிய நூல்கள் கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அநூரா கோகுல பெர்னாந்துவினால். ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அமைச்சர் எஸ்.பீ. நாவின்ன, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டீ.சுவர்ணபால, எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-ச)

# சுகாதார அமைச்சர் குணசீலன் முல்லைத்தீவுக்கு முதல் விஜயம்




முல்லைத்தீவு, செப். 10

வடமாகாண சபை சுகாதார சுதேச வைத்திய சிறுவர் நன்நடத்தை மற்றும் பராமரிப்பு அமைச்சராக கடமையேற்ற வைத்தியர் ஞா.குணசீலன் நேற்று முன்தினம் முதல் முறையாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டார்.

அமைச்சராக பதவியேற்ற பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான சுகாதார நிலையங்களான மாவட்ட வைத்தியசாலை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றில் பதவிநிலை அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினார். அத்துடன் நிலையங்களையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் –

அமைச்சராக பதவியேற்ற பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான சுகாதார நிலையங்களான மாவட்ட வைத்தியசாலை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றை தரிசிக்க வேண்டும் அங்குள்ள உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி அறிமுகப்படுத்திக்கொள்வதுடன் அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டும் வருகை தந்துள்ளேன்.

எனக்கு அளிக்கப்பட்டுள்ள காலக்கெடு எனக்கு தெரியும் எனவே எந்த குறுகிய காலக்கேட்டுக்குள் என்னாலான சேவைகளை வழங்கவேண்டுமாக இருந்தால் இந்த மாவட்டத்தினுடைய சுகாதார துறைசார்ந்த உத்தியோகத்தர்களுடைய பங்களிப்பு மிகவும் முக்கியமானது அதேநேரத்தில் இங்குள்ள மக்களின் ஒத்துழைப்பும் முக்கியமானது ஆகவே இங்கு காணப்படும் குறைபாடுகள் முறைப்பாடுகள் சரியான முறையில் எனக்குத் தெரிவிக்கப்படும் போது அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

சில பிரச்சினைகள் மாகாண மட்டத்தில் தீர்க்க முடியும் சில பிரச்சினைகள் மத்திய அரசுடன் பேசி அல்லது வெளிநாட்டு உதவிகள் மூலமாக தீர்க்க முடியும். எனது இந்த காலப் பகுதிக்குள் முழு வினைத்திறனுடனான எனது சேவையை வழங்க கடை நிலை உத்தியோகத்தர் முதல் உயர் பதவி நிலை உத்தியோகத்தர் வரை அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு என்னோடு சேர்ந்து இயங்கும் பட்சத்தில் உயர்ந்த சேவையை வழங்க முடியுமெனத் தெரிவித்தார்.

## டெனீஸ்வரன் தாக்கல் செய்த

# முதலமைச்சருக்கு எதிராக வழக்கு; 19ஆம் திகதியன்று விசாரணை

வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண அமைச்சரவைக்கு எதிராக, முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சரவையிலிருந்து டெனீஸ்வரனை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நீக்கியிருந்தார். அமைச்சரை நீக்குவதற்கான அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை எனத் தெரிவித்து முதலமைச்சருக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் கடந்த மாதம் 30ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டிருந்தது. இந்த நிலையில், வழக்கு எதிர்வரும் 19ஆம் திகதியே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (இ-ச)

ANNAMALAI ACADEMY
English, Sinhala Classes
Kokuvil, Inuvil
S.K.Manokaran
077 117 6095

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.